# நீ கொன்ற எதிரி நான் தான் தோழா

தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீ கொன்ற எதிரி
# நான் தான் தோழா

14128 CC

290709

தியா

290709 (CC
CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
894.8111

நீ கொன்ற எதிரி நான் தான் தோழா( கவிதைகள் )/ தியா/ மினசோட்டா, அமெரிக்கா/ முதற் பதிப்பு: 2023 / ©தியா/ அட்டைப்படம்: ஓவியர் புகழேந்தி/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் /வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்/ பக்கம்: 104/ விலை:500.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Nee Kontra Ethiri Naan Thaan Thozha(poems)/ Thiyaa/ Address: Minnesota, USA / First Edition : 2023/ ©Thiya/ Cover Picture: Oviyar Pugazhenthi/ Cover Designed by K.Bharanee tharan/ Published by Jeevanathy, Kalaiaham, Alvai/ Pages:104/ Price 500.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN : 978-955-0958-75-7

ஜீவநதி வெளியீடு - 282



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசை தெரியாப்
பெருவெளி
நோக்கிய பயணத்தில்
தம் ஆழ்மனதில்
நேசித்த பூமியைப் பிரிந்து,
தம் முந்தைய
நினைவுடனும்
கனவுகளுடனும்
வாழ்ந்து
கழிக்கும்
ஒவ்வொருவருக்கும்
இந்நூல்
சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியா (1978)

----------------------

காண்டீபன் இராசையா

ஈழம், யாழ்ப்பாணம், குப்பிளானைச் சேர்ந்தவர். போர்க்காலச் சூழலில் சிக்கி எண்ணற்ற பாடசாலைகளில் கல்வியைத் தொடர்ந்து வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் உயர்தரம் முடித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ் சிறப்புப் பட்டம் பெற்றவர். அங்கு தமிழ்ச் சங்கத்தின் பதிப்பாசிரியராகவும் 2003-2004இல் செயற்பட்டார். பின்பு, தஞ்சாவூர் ப்ரிஸ்ட் பல்கலைக்கழத்தில் ஆய்வு நிறைஞர் (M.Phil) பட்டப் படிப்பையும் நிறைவு செய்தபின் அமெரிக்கா சென்று ரோபோக்கள் மற்றும் திரவ சக்தி ஆட்டோமேஷன் (Robots and fluid power automation) பொறியியல் பட்டம் பெற்று, அமெரிக்காவில் புகழ் பெற்ற செயிண்ட் தாமஸ் பல்கலைக் கழகத்தில் (University of St. Thomas) பொறியியல் முதுநிலைப் பட்டத்தை (MSc) நிறைவு செய்துள்ளார்.

கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கவிதை, சிறுகதை, நாவல் எனத் தனது எழுத்துக்களால் வலையுலகில் அறியப்பட்டு வருபவர். இவருடைய முதல் நாவலான “எறிகணை“ நாவல் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வந்தது. அதன் தொடர்ச்சியாக அவரின் கவிதை நூலான “நீ கொன்ற எதிரி நான்தான் தோழா” வெளிவருகிறது.

மின்னஞ்சல்:

akshpoems@gmail.com, mailto:akshpoems@ gmail.com

வலைத்தளம்:

www.thiyaa.com, http://www.thiyaa.com/

முகநூல்:

www.facebook.com/ra.kandee

https://www.facebook.com/ra.kandee/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பும் நன்றியும்**

பெற்றோர், சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள், கிரிஷாந், அரவியன், தீபச்செல்வன், தாமரை பாரதி, வேடியப்பன், ஓவியர் புகழேந்தி, சா.வே.பஞ்சாட்சரம், பரணீதரன், வசீகரன், உறவுகள், மற்றும் முகநூல் நட்புகள்...

**மேலும்**

வெளிச்சம், சரிநிகர், சுடரொளி, தினக்குரல், வீரகேசரி, யாழ் இணையம், வணக்கம் லண்டன், வலையுலக நண்பர்கள் வட்டம், புலக்கண், டிஸ்கவரி பதிப்பகம், ஜீவநதி பதிப்பகம், எங்கட புத்தகங்கள், கானம்பாடி பதிப்பகம், பனிப்பூக்கள், Loon Media Group, கீற்று, இன்னும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்...


1. ஒரு தாயின் கண்ணீர்
2. எங்கள் உயர்ந்த கனவுகள்
3. நினைவு ஒரு நிழல்
4. கனவுகள் கலைந்தபோது
5. நான்-நீ-நமது-வாழ்க்கை
6. மேய்ப்பனை இழந்த மந்தைகள் - 1
7. அர்த்தம் புரியாதவரை
8. போர் தின்ற நிலம்
9. வாழ்தல் எப்படிக் கொடூரமானது
10. அறுவடை
11. செம்மரம் குடித்த இரத்தம்
12. எரியுண்ட தேசத்தின் சிதைவுகள்
13. இரைச்சல்
14. என் பூர்வீகக் காடு
15. கிழித்தெறியப்படும் கவிதைகள்
16. இருளும் நானும்
17. இயலாமைகள்
18. கவலையில் கனமழை
19. விவசாயி தாள் வணக்கம்
20. நானும் என்சிறு பெண்ணும் அச்சந்தரும் இரவுகளும்
21. உதிர்கின்ற பூக்கள்
22. இருட்டிலிருந்து
23. சமாந்தரக் கோடுகள்
24. பேசும் பேனாமுனை
25. விடியலின் ராகம்
26. போர் ஓய்ந்த பின்னாலும்
27. ஊரெல்லாம் வியந்து நிற்கும்
28. அன்புள்ள அம்மாவுக்கு
29. கொரோனா பயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. மேய்ப்பனை இழந்த மந்தைகள் - 2
31. காணாமல் போன வாழ்வு
32. தொழிலாளர் தினம்
33. சபிக்கப்பட்டவர்கள் கனவு
34. ஒரு ஏதிலியின் குரலற்ற அழுகை
35. கனவுகளைத் தேடி அலைபவன்
36. பறக்க முடியாத பறவை
37. மகிழ்ச்சியை தவறவிட்ட நாட்களில்
38. காற்று ஊளையிடுகிறது
39. நீ கொன்ற எதிரி நான்தான் தோழா
40. நான் ஒரு முரண்
41. அதை நாம் பார்த்திருக்கிறோம் நண்பரே
42. காலம் என்னைக் கட்டவிழ்த்து விட்டது
43. கோ<sup>ஃ</sup>ஹோம்
44. தொழுவத்தை காவல் செய்கிறது ஓநாய்
45. பிசாசுகளின் பரிசுகள்
46. நேசிப்புக்குரிய குழந்தைகள்
47. அவர்களின் வருகை
48. தொழுவத்தை காவல் செய்கிறது ஓநாய்
49. பிசாசுகளின் பரிசுகள்
50. எரியும் போது தீயாகவே இருப்பேன்
51. வலி சுமந்த பயணம்
52. நேசிப்புக்குரிய குழந்தைகள்
53. கண்ணிவெடிப் பூமியிலே
54. உன் பூர்வீகம் இதுவல்ல
55. வீடு என்பது கனவுகளின் கூடாரம்
56. அன்னை மண்ணே
57. அவர்களின் வருகை
58. அரசியலில் இதெல்லாம் சகசமப்பா
59. தடம் மாறும் தமிழர் அரசியல் தலைமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் பாவலன் தியா காண்டீபனுக்கு வாழ்த்துரை

"நீ கொன்ற எதிரி நான்தான் தோழா" எனும் இக்கவிஞனின் கவிதை நூல் சிறந்த சமகால ஆவணப்பதிவாகப் பயன்தர முதலில் என் வாழ்த்துகள். தன் இனத்தின், தாயகத்தின் அரசியல், சமூக, ஆன்மிக வரலாறுகளை அறிந்து வாழாத ஓரினம் மெல்ல, மெல்லத் தன் இருப்பை இழந்தேவிடும். இந்தத் தேய்வு நிலையில்தான் இன்று இலங்கைத் தமிழினம் உள்ளது. இதனைக் களையும் வல்லமையும், பொறுப்பும்; கடவுளதும், காலத்தின் குரல்களான எழுத்தாளர்களதும் கைகளிலேயே உள்ளன. அந்தவகை உண்மைப் படைப்பாளியாகக் தியா காண்டீபன் உருவாகுவது கண்டு அவரை நெஞ்சார வாழ்த்துகிறேன். இவரது இப்பாக்கள் எம் ஈழச் சமகால வரலாற்றைப் பதிந்த ஆவணமாகப் பயனளிக்கும் இனக் கடமை புரிவதில் வெற்றி பெறவும் எனது வாழ்த்துகள்!

இங்ஙனம்
ச.வே.பஞ்சாட்சரம்
கனடா
1.6.2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடியுரிமை பெற்ற அகதியின் குரல்

கால முக்கியத்துவம் வாய்ந்த சமயத்தில், என் ஆதர்சங்களில் ஒருவரான எஸ்.பொ அவர்கள் எழுதிய கடிதத்தை அவரின் உதவியாளராக அனுப்பிய போது அறிமுகமானவர் சகோதரர் தியா காண்டீபன். வலைத்தளங்களின் வழியாக கவிதை, கதைகள், பதிவுகள் என கவனம் பெற்ற தியா அவர்கள் எறிகணை நாவல் வழியாக தமிழக சூழலிலும் ஈழ இலக்கியப் பரப்பிலும் முக்கியத்துவமான படைப்பாளியாக திகழ்கிறார். நீ கொன்ற எதிரி நான்தான் தோழா என்ற காலத்தின் குரலை பதிவு செய்யும் இக்கவிதை தொகுப்பு, பல செறிந்த நினைவு களின் திரட்சியாக வருவது குறிப்பிடத்தக்க அம்சம்.

இந்தக் கவிதைகளில் அமெரிக்க மண்ணில் ஒட்டிவிடாத ஒரு தேகத்தை, அந்நாட்டில் கலந்துவிடாத ஒரு மூச்சை, அந்நாட்டின் பண்பாடுகளில் பிசுபிசுத்து நிற்கும் அடையாளங்களை, குடியுரிமை பெற்ற ஒரு அகதியின் குரலை காண்கிறேன். அயர்வும், வெறுப்பும், தாய் நிலம் நோக்கிய தவிப்பும், அலகுகளை தொலைந்த ஒரு ஊர்க்குருவியின் கதறலும் எனக்கு கேட்கிறது. மெய்நிகர் தொடர்புச் சூழலில் புலம்பெயர் வாழ்வின் கனத்த தொடுகைகள், தனித்த உறுவினை உணர்த்தி நிற்கிறது.

நிலத்தில் விழுந்த நாவற் பழத்தில் ஒட்டிய மண்ணை பிரித்தெடுக்க முடியாதிருப்பதை போல நிறையக் கவிதைகள் தாய் மண்ணை பற்றியதாகவே இருக்கிறது. ஊரின் தெருக்களில் இக்கவிதைகள் நடக்கின்றன. தேசத்தின் குளங்களில் இக் கவிதைகள் பூத்திருக்கின்றன. மண்ணின் வயல்களிலும் இக்கவிதைகள் விளைந்திருக்கின்றன. தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் இருந்து அறுபட முடியாது மறுக்கும் மரத்தின் வேர்களின் முகங்களை இக் கவிதைகளில் காண்கிறேன்.

நவீன வாழ்வில் சிதையும் மனங்களும் பண்பாடும் வாழ்வும் பற்றிய கவிதைகள் பல இத் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. உண்மையில் அந்தக் கவிதைகள் தமிழ் சூழலுக்குப் புதியவை. சூழலின் சீற்றம், விவசாயம், தொலையும் அடையாளங்கள், பயண அனுபவங்கள், புதிய மனிதர்கள், வாழ்வின் துயரங்கள் என்று பல்வேறு நிலைப்பட்ட தன்மைகளை பேசுகின்ற கவிதைகளும் இத் தொகுதியில் இடம்பெற்றிருப்பதும் கூடுதல் சிறப்பாகும்.

அலங்காரங்கள், வருணனைகள், அணிகள் அற்ற இக் கவிதைகள் பெரும்பாலும் வாக்கு மூலங்களாகவே இருக் கின்றன. அகதியின் வாக்குமூலமாக, காணாமல் ஆக்கப்பட்ட வனின் வாக்குமூலமாக, எளிய மனிதர்களின் வாக்குமூலமாக, ஒடுக்கப்பட்டவனின் வாக்குமூலமாக, தொழிலாளியின் வாக்கு மூலமாக இக்கவிதைகள் ஒலிப்பதுதான் இவற்றின் தனித் தன்மைகளாகவும் இருக்கின்றன. மிக முக்கியமாக "நீ கொன்ற எதிரி நான்தான் தோழா" என்ற மிகச் சிறந்த வாக்குமூலத்தின் வழியாக இக்கவிதை தொகுதி நோக்கி ஒலிக்கும் குரல் மிக மிக முக்கியமானது. தமிழுக்கு மிகச் சிறந்த கவிதை தொகுதியை வழங்கும் கவிஞருக்கு வாழ்த்துகள்.

**தீபச்செல்வன்,**
**கிளிநொச்சி.**
**29.06.2023**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டவனுக்குத்தான் நோவு தெரியும்

## முன்னுரை

“நீண்டதும் நெருக்கடிகள் நிறைந்ததுமான ஈழத் தமிழர்களின் வரலாற்றுப் பாதையில் தொடர்ச்சியாக நாம் கொடும் போரை எதிர்கொண்டோம். போர் எங்கள் மீது வலிந்து திணிக்கப்பட்ட போதும், அது எங்கள் வாழ்வியலைச் சிதைத்த போதும், அதற்குள்ளும் அழகியல் நிறைந்த, மனிதப் பண்பு களுடன் கூடிய ஒரு ஒழுக்கம் நிறைந்த நல்வாழ்விருந்தது”. இப்படித்தான் “எறிகணை” நாவலுக்கான முன்னுரையை நான் தொடங்கி யிருந்தேன். அதை மீண்டும் ஒருமுறை இவ்விடத்தில் ஆணித்தரமாகக் கூறிக்கொள்கிறேன்.

சிலர் எனது படைப்புக்களை விமர்சிக்கும் போது “ஈழ அரசியல் வாடை” அடிக்கிறது என மூக்கைப் பிடிக்கிறார்கள். உண்மையைச் சொல்வதானால் ஈழத் தமிழ் மக்களின் உரிமைகள், இன விடுதலை, அரசியல் அபிலாசைகள், கடந்து வந்த பாதை, மற்றும் நிகழ்கால விடயங்களை எந்தவொரு விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லாமல் எழுத முனையும் ஒரு சராசரி எழுத்தாளனாகிய நான் வளர்ந்த சூழல் அப்படியானது. நான் பிறக்கும் போதே ஈழத்தில் போர் தொடங்கி விட்டது. கிட்டத்தட்ட என் வாழ்நாளின் 30 வருடங்களை (1978-2008) நேரடிப் போர் நடக்கும் பிரதேசங்களில் வாழ்ந்து கழித்தவன் நான். அதனால்தான் என் கதைகள், கவிதைகள் எல்லா வற்றிலும் அதன் தாக்கம் பிரதிபலிப்பதைக் காணலாம்.

என் கவிதைகளில் போரின் தாக்கமும், வலியும், மாணவர்களின் கையறு நிலையும், வீடிழந்தோரின் இயலாமைகளும், இன உணர்வும், விடுதலை வேட்கையும் இன்ன பலவும் பேசு பொருளாக உள்ளன. அதற்கு முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் நான் வளர்ந்த சூழல் அப்படி. என் கண்முன்னே அன்றாடம் நடந்த கொடுமைகள், இராணுவ அடக்குமுறைகள், இன வன்முறைகள் என்று எல்லாமே என்னைப் பாதித்தன. கிட்டத்தட்ட பல்கலைக் கழகம் போவது வரையான என் இருபது வருட இளமைக் காலத்தில், குறைந்தது பத்துக்கு மேற்பட்ட ஊர்கள், எண்ணற்ற பாடசாலைகள், பல நாட்களில் ஒரு நேர உணவு, சில நாட்களில் பட்டினி என்று அலைந்து திரிந்து காலத்தைக் கழித்த குழந்தைகளில் நானும் ஒருவன்.

கடந்த இருபது வருடங்களாக நான் எழுதிச் சேர்த்த 59 கவிதைகள் இந்தக் கவிதைப் புத்தகத்தில் உள்ளன. அவற்றில் சில கவிதைகள் 2009 க்கும் முன்னர் எழுதப்பட்டவை இன்னும் பல கவிதைகள் 2009 இன் பின்னைய சூழலைப் பிரதிபலிப்பவை. "பட்டவனுக்குத்தான் நோவு தெரியும்" என்பதால் ஒருசில கவிதைகளில் ஈழம் தாண்டி வெளியுலகில் நடக்கும் சில பல நடப்புக்களை, வலிகளை, சோகங்களை, அவலங்களை பேச முற்பட்டுள்ளேன். பெரும்பாலும் அன்றாட வாழ்க்கையில் நான் கண்டு, கேட்டு, பட்டு, உணர்ந்த விடயங் களைக் கவிதை மூலம் கொண்டுவர முயன்றிருக்கிறேன்.

நிறைவாக, புலம்பெயர்ந்து தூரதேசம் வந்த போதும் இன்றுவரை என்னையும் என் எழுத்துக்களையும் திறனாய்வு செய்து என்னை எழுதத் தூண்டிய அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றி.

**அன்புடன்,**

**தியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தாயின் கண்ணீர்

ஒரு தாயின் கண்ணீரில்
ஆயிரமாயிரம் அர்த்தங்கள் புதைந்துள்ளன

அவள் இப்போது மரணத்தின் அறிவாளி
இரத்தம் மற்றும் கண்ணீரிலிருந்து
சொல்வதற்கு அவளிடம்
இன்னும் நிறைய இருக்கின்றன

முன்னொரு காலத்தில் அவள்
எதிரியிடமிருந்து தன் மகனுக்காகப் போராடினாள்
அவள் வலிமையானவள் உறுதியானவள்
வரலாறு அவளுக்கு நிறைய கற்றுக் கொடுத்துள்ளது
இழந்த தன் குழந்தைக்காக
அவள் தனது முதல் கண்ணீரை விட்டாள்

மகனே
நீ எங்கிருந்தாலும்
அந்த கடவுள் உன்னையும் காப்பாற்றுவார்
என்ற நம்பிக்கையில்
இன்னும் உன் தாய்
உனக்காகப் பிரார்த்தனை செய்கிறாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உயர்ந்த கனவுகள்

கெட்ட கனவுகளால் சூழப்பட்ட நிலவுலகில்
நிழல் திரை
உடலற்ற குரல்கள்
சதையற்ற முகங்கள்
மெய்நிகர் யதார்த்தத்துள்
வாழ்வைத் தொலைத்தவர்கள்

கற்பனைகளால் நிரப்பப்பட்ட
குவளைகளின் குழந்தைகள்
அனிமேஷன் பொம்மைகளாய்
கார்ட்டூன் முகங்களுடன்
மாய உலக குகையில்
தொலைந்து போனவர்கள்

வாழ்தல் ஒன்றும் அத்தனை சுலபமானதல்ல
வாழ்நாட்கள் மிகவும் குறுகியவை
ஆனால்
பிரபஞ்சத்தின் சட்டம்
என்றும் எமக்கு
இணக்கமானதாக இருப்பதில்லை
பிரபஞ்ச இணக்கம்
புரிந்துகொள்ள முடியாதது

சுடுகாட்டில் எங்கள் உயர்ந்த கனவுகள்
கொட்டிப் புதைக்கப்படும்போது
வாழ்வின் முடிவில் நாம்
யாரிடம் முறையீடு செய்யலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவு ஒரு நிழல்

புல்வெளியில் தூங்கும் நிழல்கள்
நீண்ட பயணத்தின் இடையிடையே
பாலங்களைக் கடப்பதுபோல
என் கடந்தகால நினைவுகளை மீட்டியபடி
என்னைக் கடந்து செல்கின்றன

ஒரு நிழலில் இருந்து இன்னொரு நிழலுக்கு
மாறிமாறி நான் பயணப்பட்டேன்

மகிழ்ந்து தூங்கும் மரங்களின் கீழ்
கருமையின் ஒளியால் சூழப்பட்ட நிழல்கள்
ஆளுறக்கம் கொள்கின்றன

பயங்கர சூறாவளி வீசுகிறது
மரங்கள் வேருடன் குடைசாய்ந்து
நிழல்களுடன் சல்லாபித்தபடி
மண்ணில் புரண்டன

என் நினைவு ஒரு நிழல்
வெறுமையின் பாத்திரம்
காற்றில் தூக்கி வீசப்பட்டது

தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகள் கலைந்தபோது

எதற்காக பிறந்தோம் என்பதை
விசாரித்து அறியலாம் என்ற வேட்கையில்
பரந்த வானத்தைப் பார்க்கிறேன்

புலன்கள் அடக்கி
திணறிய ஆன்மா பற்றியும்
அதற்கு அப்பாற்பட்ட
தெய்வீக விஷயங்கள் பற்றியும் தேடினேன்
ஆனால் எதையும் நான் பார்க்கவில்லை

என் நித்திய கனவில் அடிக்கடி
கடவுளின் கழுத்தைச் சுற்றியபடி பாம்பு இருந்தது

கடவுள்
என் பரிசுத்தமான இரகசியங்களை
அறிந்து வைத்திருக்கலாம் என்ற
பரிபூரண நம்பிக்கையில்
அவரின் காலடியில் மண்டியிட்டு விழுவேன்
பின் எழுவேன்
மீண்டும் விழுவேன்
இது அடிக்கடி நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது

ஓடையில் இறங்கிய அன்னம் போல
மென்மையான கனவுகள்
என் ஆழ்மனதில்
அடிக்கடி தோன்றி மறைகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னறிவிப்பு ஏதுமின்றி
என் உள்ளுணர்வு கிளர்ந்து எழுகின்றது
ஊமைக் காயங்கள் இன்னும் வலியெடுத்தாலும்
ஒரு பார்வையற்றவனின் முகத்தில் தெரியும்
பேரொளி போல்
சொர்க்க வாசல் நோக்கி நடக்கிறேன்

என் கனமான காயத்துக்கு
மருந்து போடவென்று
கடவுளின் மகிழ்வான முகத்திலிருந்து
பல சிறகுகள் முளைத்த தேவதைகள் வந்தார்கள்
என் இரத்தம் குளிர்ந்தது

மென்மையான தொடுதல் என்னைத் தட்டி
எழுப்பியது
கனவுகள் கலைந்தபோது
திகில் நிறைந்த பயம் மட்டுமே மிஞ்சியது

290709



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ–நான்–நமது வாழ்க்கை

மேலை நாடெங்கும்
ஈழத்தின் ஏழைப் புத்திரர்கள்
உழைத்துழைத்து வரி கட்டி
வளம் பெருக்கி வாழ எண்ணி
திசை நகர்ந்து
சமுத்திரத்து மீன்களாக
சகதியிலே மாட்டி யாசித்துக் கிடக்கின்றார்

காலத்தின் சதியினாலே அவனுமோர் அகதிதான்
கால நகர்வில்
சிறு நண்டுப் படம் போல
சிலவேளை அவர் வாழ்வு
மறைந்தும் போகலாம்

வாழ்க்கை சீவியமாகி
போராட்டமாய் இன்னும்
தொடர்கின்றன நாட்கள்

ஆனால்
பின்னொரு நாளில்
அகதித் தேசத்து
அடிமைகள் அனைவரும்
முடிவிலாப் பெருவெளி கடந்து
நாடு மீள்கையில்
அவலம் மட்டுமே பேசித் துயருறும்
அந்தர நிலைக்குள்ளும் தள்ளப் படலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேய்ப்பனை இழந்த மந்தைகள் – I

காட்டுமிராண்டித்தனமாகவும் நயவஞ்சகமாகவும்
எம் முன்னோர்கள் தோற்கடிக்கப்பட்ட
எங்கள் மண்ணில்
கனவான்களாகவும் கடவுளர்களாகவும்
எங்களில் தம்மைத் திணித்தபடி
இன்னும் எங்கள்மேல்
தம் வன்மங்களைக் கொட்டித் தீர்க்க
புறப்பட்டுக் கொண்டிருக்கிறது ஒரு கூட்டம்

மீட்பர்கள் என்று தம்மை அழைத்தபடி
தமக்குத் தாமே பட்டங்கள் சூட்டிப்
பாணங்கள் ஏவி
எம்மைச் சூழ்ந்து கொண்டனர்

மறைந்திருந்து பாணங்கள் ஏவுவதில் வல்லவர்கள்
மீண்டும் நாவாய்கள் ஓட்டி
புதர்களைக் கடந்து கரையைத் தொட்டனர்
அம்புகள் வீழ்ந்து
மீண்டும்
ஆயிரம் துளைகள் போட்டன

நஞ்சு தடவிய பாணங்கள் நடுவில்
பிஞ்சுகள் கூட வெந்து வதங்கினர்

உங்கள் தர்மம்
நீதி
அகிம்சையென்ற பசப்பு வார்த்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் நாளில் காற்றில் பறக்கலாம்
தன்நெஞ்சே தன்னைச் சுட்டு
நீவீர்
செத்தும் போகலாம்

அன்றில்

காலங்கடக்கும் பின்னொரு நாளில்
உங்கள் பாதங் கழுவித் திருவடி தொழுதோரை
அரக்கர் என்ற அவப் பெயர் நீக்கி
அரியணை ஏற்றி ஆட்சியில் அமர்த்தலாம்

அவர் காலந்தோறும் உம் வாயில் காத்து
நன்றியுடன் உம் காலடி கிடக்கலாம்

ஆனால்

எங்கள் சாம்பல் மேட்டில்
எருக்கலைகள் பூக்காது
ஒரு இனத்தின் சாபம்
அவர்தம் வேட்கை
காலங்கடந்து இன்னும் நீளும்
வலிமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தம் புரியாதவரை

எல்லாம் என்பதன் அர்த்தம் புரியாதவரை
எல்லாம் இங்கே
புதுமையாகத்தான் இருக்கிறது

வாரி வழங்கிய கைகள்
இன்று வாட்டம் கண்டன
ஏறு தழுவிய மார்புகள் எல்லாம்
சோர்வு கொண்டன

ஏர் பூட்டி உழுதிருந்த நெல் வயல்கள்
வான் பார்த்துக் காத்திருக்க
வாழாவிருப்பதுவே வாழ்க்கையானது

வசந்தத்தை எதிர்பார்த்து காத்திருந்த வேளையிலே
வறட்சி மட்டுமே மீதமானது
பட்டினி கிடந்து பழக்கப் பட்டதால்
பசி
நிரந்தரமாகவே எம்மில் ஒட்டிக் கொண்டது

எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாகி
இன்னும் வாழ்தல் வேண்டி
தொடர்கிறது நம் சீவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் தின்ற நிலம்

ஒருநாள் சூரியன்
பூமிக்கு இறங்கி வந்தான்
திறந்த விளையாட்டு மைதானம்
ஆட்களற்று வெறுமையானது

மாணவர்கள் எங்கும் இல்லை
பறவைகள் அற்ற வனாந்தரமாய்
தாயில்லாப் பிள்ளைகள் போல்
தனிமையில் கிடந்தன பாடசாலைகள்

மரங்கள் நிழல்களைத் தின்று
ஏப்பம் விட்டுக்கொண்டிருந்தன
காகிதப் பறவைகள்
காற்றில் சிறகு விரித்துப் பறந்தன

தூசி படிந்த பள்ளி மணி
அடிப்பாரற்று அநாதையாயிருந்தது
துண்டிக்கப்பட்ட இலைகள்
காற்றின் அந்தரத்தில் நடம்புரிந்தன

பள்ளிகளைப் போர் சூழ்ந்த
பின்னொரு நாளில்
வகுப்பறை நாற்காலிகளை
கண்ணீர் பூக்கள் நிறைத்தன
கரும்பலகைகள் மழையில் நனைந்தன
மற்றும் மணிகள்
தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்தல் எப்படிக் கொடூரமானது

எதுவும் விதைக்கப்படாத வயல்வெளிகள்
யாரும் புதிர் எடுக்காத தரிசுநிலங்களாக
கண்மூடித் திறப்பதற்குள் கற்சிலையாய்
அமைந்துபோன மனிதர்கள்

வாழ்தல் எப்படிக் கொடூரமானது

கரடுமுரடான பாதை போல்
வாழ்தல்
இத்தனை கடினமானதா என்ன
எதுவுமே புரிவதில்லை

கால் பதிக்க முடியாத சேற்று வயல்வெளிகள்
கட்டாந்தரையாகிக்
கண்ணீர் வடிக்கக் கண்டேன்

ஆற்றுப்படுக்கைகளில் ஆங்காங்கே
பிளவுகள்
வெடிப்புகள்

உடைப்பெடுத்துப் பாயும்
வெற்றுக்குளங்களில்
செத்துக் கிடந்தன நீர்க்காக்கைகள்

குளக்கட்டின் மரநிழலில்
காவனிப்பாரற்று
சிலையாகச் சமைந்திருந்தார் பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை

மலையொத்த மனிதரெல்லாம்
ஏதிலியாய் வாழ்விழந்து
ஒருவர் பின் ஒருவராகச் சிறைப்பட நடந்தனர்

சிறுமலைகள் கூடிநின்று
பூமியைப் புறங்கண்ட பின்னொரு நாளில்
மலைக்காடுகள் ஒன்றுகூடி
மலைகளை
மெல்ல மெல்லத் தின்றுகொண்டிருந்தன

மக்களையும் மண்ணையும்
நீண்ட மலைத் தொடர்கள்
பிரித்துக் கூறு போட்டபோது
சூரியன்
மலை இடுக்கில் விழுந்து
இறந்து போனான்

நட்சத்திரங்கள்
ஒன்றன்பின் ஒன்றாக
உதிர்ந்துகொண்டிருந்தன

நிலவு தேய்ந்து மறைந்து போனது
இன்னும்
மனிதர் மட்டும் ஏதிலியாய்
இழந்தவற்றை நினைத்தபடி
வான் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மரம் குடித்த இரத்தம்

141280C

திசை தெரியாத் தேசமொன்றில்
அடைபட்ட அந்நியர் போல்
அடிமைச் சாசனம் எழுதியபின்
எஜமானர்களின் கல்லா நிரப்பி
மீளும் பெரும் பணிச் சுமையுடன்
போயிருந்த அவர்கள்
இன்று எம்முடன் இல்லை

தெருநாய்கள் இயங்கும் தெருவில்
துப்பாக்கி குண்டுகளால் தொளையிடப்பட்டு
தூக்கி வீசப்பட்டனர்

கருப்பு இரவுகளின் தனிமை தணிவதற்குள்
ஏழைத் தொழிலாளர்களின்
ஜீவநாடிகள் அடங்கிப் போயின

வன்மம் கொட்டித் தீர்க்கப்பட்ட பின்னர்
கண்ணீர்த் துளிகளை மட்டுமே
எமக்குப் பரிசாக அளித்தன பிசாசுகள்

நாளை பற்றிய கனவுகளை
சுமந்து சென்ற ஏதிலிகள் மேல்
தங்கள் குரோதத்தைக் கொட்டித் தீர்த்து
மரணத்தை பரிசாகக் கொடுத்தன பிசாசுகள்

வெம்மை தீய்ந்த
மரக் காட்டின் நடுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவத்தின் தீர்ப்பை
எழுதிச் சென்ற பாவிகளே

ஒரு தாயின்
நேசிப்பின் உக்கிரம் பற்றியோ
இழப்பின் வலியால் துடிக்கும்
துணையின் இருப்புப் பற்றியோ
அதீத நேசிப்புக்குரிய தந்தையை இழந்த
பிள்ளை ஒன்றின் பெருவலி பற்றியோ
எப்போதாவது நீவீர் உணர்ந்ததுண்டா
பட்டவனுக்குத்தான் அதன் வலி தெரியும்

(07 Apr 2015 அன்று ஆந்திராவில் உள்ள சேசாசலம் வனப்பகுதியில் செம்மரக்கட்டைகள் வெட்டி கடத்தியதாகக் கூறி தமிழர்கள் 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு நினைவு கூர்ந்து எழுதிய கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரியுண்ட தேசத்தின் சிதைவுகள்

மணல் தின்ற புல்வெளி
அனல் தின்ற பனந்தோப்பு
புதையுண்டு எரியுண்ட மீதிக் காடுகள் எல்லாம்
மணல் மேடாய்த் திட்டுக்களாய்

எரியுண்ட தேசத்தில்
சிதைவுகள் மட்டுமே மீதியாக
கால் மிதிக்கும் இடமெல்லாம்
பல்லிளிக்கும் கூரிய முட்கள்

யுத்த காண்டம் முடிந்த பின்னர்
சிதைவுகளாய் எச்சசொச்சம்
வாழ்விழந்த வயல்வெளிகள்
பொலிவிழந்து பூவிழந்து தளிரிழந்து
கருகி நிற்கும் மரங்கொடிகள்

சிதைவுகளைச் சுமந்தபடி
தனித்திருக்கும் வீதிகளும் வீடுகளும்
மீண்டும் ஓர் நாள் தோண்டப்படுவதற்காய்
காத்திருக்கும் மண்தரைகள்
எல்லாம் ஒன்றுகூடி எரியுண்ட தேசத்தின்
காட்சிகளாகிப் படமெடுக்க
நான் மட்டும் இழந்தவற்றை தேடியபடி
மீண்டும் மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரைச்சல்

பல்லாயிரம் உயிர் தின்றும்
அடங்காது ஆர்ப்பரிக்கும் கடல்
இரைச்சல் நிறைந்த உலகின் சொந்தக்காரனாகிப்
பயமுறுத்தும் பூதம்

என் மனம் போல்
அமைதியின்றிப் பாய்கிறது நீல நீர்

பெருகி வந்து உயிர் குடித்து
உயிர்ச் சுவடழித்து
எம் நிம்மதியைக் குலைத்து
எம்மை
நிர்க்கதியாக்கிய அலை

மணல்த் திட்டால் மூடி
எதுவும் நடவாதது போல்
பாசாங்கு செய்யும் நீண்ட கரை

எல்லாம் ஒன்றுகூடி இரைகிறது
இன்னும் வேண்டுமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பூர்விகக் காடு

ஆயிரமாயிரம் நினைவலைகள் முட்டி மோதின

நினைவழியாப் பொழுதுகளில்
உடும்பு
முயல்
மான் வேட்டையாடிய காடுகள்
தனிமையில் உறையக் கண்டேன்

காட்டாற்றின் கரையினிலே
கதையளந்த காலம் போய்
மாயத் தோற்றங்கள்
என் மனத் திரையில் கோலமிடக் கண்டேன்

மவுனமாக வரையப்பட்ட
என் கவிதையின் வரிகள் போல்
அசைவற்றுக் கிடக்கிறது
என் பூர்வீகக் காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழித்தெறியப்படும் கவிதைகள்

இந்தக் கவிதைகளை எங்கள்
பண்பாடென ஒருகாலத்தில்
நாங்கள் உறுதி பூண்டிருந்தோம்

புழுக்கத்தில் கசியும் இரவுகளில் கூட
நெறி தவறாமல் நாம்
எம் கவிதைகள் படித்தோம்

காலம் உருண்டோடி
இச்சைக் கருவிக்குச் சண்டை போட்டபோது
கசக்கி எறியப்பட்டன பல கவிதைத் தாள்கள்

சாத்தான்களின் இவ்வுலகில்
இங்கு
யார்மீதும் புகார்களுக்கு இடமில்லை

ஆதலால்

எங்கள் கவிதைத் தாள்களை
அடிக்கடி இங்கே
பேய்கள் கூடிக் கிழித்தெறிகின்றன

அந்தர வெளியில் மிதந்து
காட்சிகள் மட்டுமே வாழ்வென நம்பும்
தலைகீழ் பட்சிகளாய்

எக்கணமும் அவிழ்க்கத் துடிக்கும் வன்மத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தெருவின் ஓரத்தையும்
முகர்ந்து பார்த்தபடி நகரும் நிர்வாண நாய்கள்

களியாட்டச் சுகம் தேடும் வேட்கையில்
புணர்வதை மட்டுமே குறியாகக் கொண்டு
குறிகள் நிமிர்த்தி நகக் குறிகள் பதித்து
குரல்வளை நசுக்கும் கொடூர ஓநாய்கள்

இரண்டகப் பிண்டங்கள் உலவும்
பெருநகரில்
கவிதைகள் பற்றிய தேடலில்
பிசாசுகள் பேதங்கள் பார்ப்பதில்லை

பிண்டம் ஒன்றே குறியெனக் கொண்டு
எங்கள் கவிதைகளை
அவை
எப்போது வேண்டுமானாலும்
நொடிப் பொழுதில் கிழித்தெறிகின்றன
.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளும் நானும்

இயலாமைகளுக்குள் வாழ்ந்து
பழக்கப் பட்டவன் நான்
மீண்டும் மீண்டும்
குழி தோண்டிப் புதைத்துவிட முயல்கிறேன்
என் இயலாமைகளை

என்னையும் மீறி அது
வீறுகொண்டு
என்னை அடக்கியாள நினைக்கிறது

உருவமில்லாத அந்த மர்மம்
பெரும் இறுமாப்புடன்
கடிவாளம் பூட்டிய குதிரையாக
என்னைக் கட்டியாள நினைக்கிறது

ஆனாலும்

மீண்டும் மீண்டும் என் இயலாமைகளை
குழி தோண்டிப் புதைத்துவிட முயல்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயலாமைகள்

நடை பாதையை மறித்து
மூக்கை நீட்டும் கடைகளின்
முன் கூடாரங்கள்
வீதிக் கடவைகளில் குறுக்கறுக்கும் விரைவுந்துகள்

பேருந்தில் மூச்சடக்கி
கால்வைக்க இடம் தேடும் நான்
மல்லுக்கட்டி
நடத்துனருடன் சண்டை போடும் ஒரு கூட்டம்
மாற்றுத் திறனாளிகள்
மற்றும் முதியோர் இருக்கைகளில்
காதில் மாட்டிக் கைப்பேசியில்
இசை கேட்கும் இளசுகள்
தள்ளாடும் வயதிலே
தன் குடும்ப வாழ்வுக்காய்
உழைக்க புறப்பட்ட பெரிசுகள்
எனப் பேருந்து நகரும்

தின வாழ்க்கை வாழ்வதற்கு
காலையும் மாலையும்
கொளத்தூரும் கோடம்பாக்கமும்
என் வீட்டுத் திண்ணைகளாகும்
இப்படியே
நாள்தோறும் நம் பிழைப்பு
கணிணியிலும்
வழிச் செல்லும் பாதையிலும் கழிகிறது

(2009 - சென்னையில் வாழ்ந்த நாட்கள் பற்றி நினைவுகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலையில் கனமழை

கொட்டித் தீர்த்த கனமழையில்
நனைந்தபடி நடக்கிறேன்
வண்டியில் பொதி ஏற்றி இழுத்தபடி
விரைந்து நடக்கிறான்
ஓர் ஏழைப் பொதி வண்டி இழுப்பாளன்

நெடுவீதியில் பிரித்துப் போட்ட கால்வாய்கள்
வாய்பிளந்து கிடக்கின்றன

நீண்ட பெருந்தெருவின்
நிரம்பிய வெள்ளத்தில்
முட்டிமோதி மல்லுக்கட்டிய வாகனங்கள்
வழியை மறித்தன
பிடித்த குடையை
"லைலா" பறித்துச் சென்றது

தெருவோரம் மழையில்
தோணி விடும் சிறுவர்கள்
அக்கினி வெயிலை மறைத்த
மழை மேகத்துக்கு நன்றி தெரிவித்தபடி
பேருந்துக்கு நடக்கிறேன்

மே மாதம்
நம் வாழ்வில் மறக்கப்படக் கூடியதல்லவே
வானம் கண்ணீர் மழை பொழிந்து
மீண்டும் ஒருமுறை அழுதுதீர்த்தது

(மே, 2010 இல் "லைலா புயல்" பற்றி எழுதிய கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயி தாள் வணக்கம்

சேற்றில் புரண்டெழும்பி
வயல் நிலத்தில் தாளமிட்டு
உழுது நல்ல வரப்பிட்டு
நெல்லெறிந்து உரம் விதைத்து
நிலம் காத்து
சொல் பொறுக்காச் சோர்விலராய்
கண்ணுறக்கம் ஏதுமின்றி
எல்லையிலே காவலிட்டு
நெற்கதிர்கள் குனிந்து மண்ணில்
கோலமிடும் காலம் வர
பக்குவமாய் அறுத்து
நல்ல பதத்துடனே சூடடித்து
உலகமக்கள் உய்திடவே
உழைத்து நல்ல வேர்வை சிந்தி
உன்னதமாய் வாழும் எங்கள்
நன்செய் மாந்தர்தனை
நாளும் நினைத்திடுதல் நலமன்றோ

தானுண்ணா வயிறு காய்ந்து
தன்நாடு செழித்திடவே பாடுபடும்
அவ் ஏர் பிடித்த கைகளுக்கு
பலகோடி வந்தனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் என்சிறு பெண்ணும் அச்சந்தரும் இரவுகளும்

ஆராரோ ஆரிவரோ
ஆரடிச்சு நீயழுதாய்
அடித்தாரை சொல்லியழு
ஆய்கினைகள் பண்ணி வைப்பேன்

காத்து நுழையாத வீட்டினுள்ளே
காவாலி அவன் நுழைந்தான்
பாத்துப்பாத்து கட்டி வைச்ச
செல்வமெல்லாம் கொண்டுபோனான்

முகமூடி கொண்டொருவன்
படியேறி வருவானென்று
அடிபாவி நான் நினைக்க
ஆதாரம் ஏதுமுண்டோ

கடிகாவல் செய்து வைக்க
காவலர்கள் யாருமில்லை
கடிநாயும் வளர்க்கவில்லை
காவலுக்கு வைக்கவில்லை

அந்தாளும் சிவனேன்னு
ஆகாயம் போயிட்டார்
இந்த உலகமதில் எங்களுக்கு
வேறு துணை யாருமில்லை

சிறுக்கி செம சிறுக்கி
சின்னமகள் இவளிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுக்கி எடுத்த முத்து
வேறெதற்கு உலகினிலே

பொன்னனான பொன்மணியை
பொத்திப் பொத்தி வளர்க்கையிலே
கண்ணான கண்மணிகள்
கருவிழியும் மங்குதடி

கருவிழிகள் மங்கி மங்கி
காவல் செய்யும் வேளையிலே
இரவுதனில் எவன் வருவான்
எதையெடுப்பான் என்று பயம்

இரவு வரும் வேளையிலே
காடையர்கள் வீடு வந்தால்
இரவி வரும் வேளைக்குமுன்
பாடையெல்லோ கட்டிடுவாரு

பொழுதேறிப் போகையிலே
வருவதுவோ நிததுக்கம்
அனுதினமும் முகஞ்சினுங்கும்
அழுதழுது கண்கள் மங்கும்

கள்ளன் வந்தான் என்ற சேதி
வெள்ளம் போல பரவமுன்னர்
உள்ளங் கொள்ளை போனதென்று
ஊர் முழுக்க கதையுரைப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தி இலை போல நெஞ்சு
படபடக்கச் செய்யுதடி
நெருடி நெருடி நெஞ்சம்
பயத்தில் திணறுதடி

சிறு பெண்ணும் நானுமிங்கே
உறு மீனாய் தவிக்கையிலே
சிலவேளை வருநாளில்
வயசுக்கு வந்து விட்டால்

காப்பாற்ற நாதியற்று
கலங்கியெல்லோ போயிடுவேன்
பாப்பாரும் யாருமில்லை
பாவிநான் தவிக்கையிலே

கண்ணான கண்மணியே
காலந் தாழ்த்தி வயசுக்கு வா
மண் ஏகும் காலம் வந்தால்
மகிழ்வுடன் நீ வளர்ந்திடம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதிர்கின்ற பூக்கள்

தன்பாட்டில் கிழியும்
நாட்காட்டியின் பக்கங்களிடையே
நல்ல நேரமும் கெட்ட நேரமும்
எழுதிச் செல்கிறது கிரகநிலை

கேள்வி கேட்டுச் சலித்துப்போன
என் கவிதை
திடீரென என்னைப் பிரிவதாக ஒப்பந்தம்

இன்னமும் பெயரிடப்படாத
என் கவிதைக்கு
தலைமுதல் பாதம் வரை
அலங்காரம் செய்து
அழகு பார்த்தவன் நான்.

என் வார்த்தைகளும் கேள்விகளும்
முரண்பட்டுச் சண்டையிட்டபோது
பிறப்பெடுத்துக்கொண்ட என் கவிதை
இன்றுடன் என்னிடமிருந்து
விடைபெற்றுக் கொள்கிறது

பிரிவுத் துயரில்
அவிந்து புழுங்கும் என் இதயம்
இருபக்க விலாக்களுக்குள் அகப்பட்டுச்
சிறைவாசம் கொண்டு அழுது புலம்புகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருட்டிலிருந்து

இரைச்சல் மிக்க வாழ்வு
முட்கள் நிறைந்த நெடுவழிப் பயணம்
சிதளூறும் ஊமைக் காயங்கள்
உள் வலியெடுக்கும் நினைவழியாப் பொழுதுகள்
மனதுள் பூட்டிய மௌனவலி
உடலினுள் பரவும் கொடுந்தீயாகிச் சுடுகிறது

மாட்சிமை மிக்க என் உறவுகளே
என் சிதைக்குத் தீ மூட்டியாவது
நீவீர் வெளிச்சம் பெறுவீராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாந்தரக் கோடுகள்

வெட்டிப் போட்ட
என் தோட்டத்து வேலிக் கதிகாலாய்
முளைத்துவிட ஆசை கொண்டேன்
வெட்டி எறிந்த நகமென
உமிழ்ந்து துப்பினர் ஒருசிலர்

சுவரில் எறிந்த பந்தாகி மீண்டும்
அவரிடமே மீண்டன அவவ தம் சுடுசொற்கள்

கட்டையில் கட்டிய மாடாகி
முன்னர்
உன் கொல்லையில் வட்டமிட்ட
என்வலி புரிய
நியாயமில்லைத்தானே உனக்கு

கணக்காளன் வீட்டு
கணிணி விசைப் பலகையின்
இலக்கங்கள் போல
செத்துக் கொண்டிருக்கிறேன் நானிங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேசும் பேனாமுனை

என் பேனா
செங்குத்தாய் கொஞ்சம் கோணலாய்
நிலைக் குத்திக் கண்ணீர் வடிக்கிறது

வார்த்தைகள் செய்து கொடுத்த இட வசதிக்குள்
வாழப் பிடிக்காமலோ என்னவோ
மீண்டும் மீண்டும் வெற்றுத் தாள்களில்
கோடுகளாய் வளைவுகளாய் புள்ளிகளாய்
இன்னும் பலவாய்
தன்னை நுழைத்து
திருப்திப் பட்டுக்கொள்கிறது
என் பேனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியலின் ராகம்

நெற்கதிகள் குனிந்து நின்று நிலம் பார்க்கும்
வெள்ளெலிகள் புற்றெடுத்து விளையாடும்
பன்றியும் அகளானும்
படையுடனே நடை பயிலும்

நிறை குளம் பெருக்கெடுத்து அருவி பாயும்
பாலியாறும் பறங்கியாறும் கைகோர்க்கும்
ஊர் கூடியிருந்து உறவுடனே
உண்டு மகிழ்ந்த - எங்கள்
அன்னை மடி முறுவலிக்கும்

வற்றாப்பளை ஆச்சியும் பன்றித் தலைச்சியாளும்
பங்குனியில் பொங்கலிடும்
மாமாங்கேஸ்வரமும் மாவிட்டபுரமும்
மறுபடியும் குதுகலிக்கும்

கன்னியாயை காங்கேசன்துறை
கரம் பிடிக்கும்
கேதீச்சரமும் கோணேஸ்வரமும்
கொடியேறும்

வல்லை வெளியும் முல்லை மண்ணும்
சங்கமிக்கும்
மீன்பாடும் தேனாடும் திருமலை நகரதுவும் வன்னியுடன்
கைகோர்க்கும்

குருவிகள் மீண்டும்
இசைமழை பொழிந்து குதுகலிக்கும்
சேவல்கள் வாழ்த்த
விடியலின் ராகம் எதிரொலிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் ஓய்ந்த பின்னாலும்

கல் நெஞ்சும் கசிந்துருக
இன்று
கையேந்தும் நிலை வந்தும்
சொல் பொறுக்காச் சோர்விலராய்
கைகட்டி நிற்காத
ஏர் பிடித்த நல் மனிதர்
வல் வினையால் வாழ்விழந்து
வாழாவெட்டி ஆகி நின்று
நெல் மணிக்கும் வரிசை கட்டி
கையேந்தும் நிலை கொடிது

பார் போற்ற வாழ்ந்திருந்து
பசி விலக்கி வாழ்ந்தவர்கள்
ஏர் பிடித்த கையாலே
அள்ளி அள்ளிக் கொடுத்தவர்கள்

வந்தாரை வரவேற்று
ஊர் மெச்ச உபசரித்தோர்
நாதியற்று
நடுத் தெருவில் அகதியாய் அலைகிறாரே

போர் ஓய்ந்த பின்னாலும்
ஊர் ஏக முடியாத
கொடுமையினை யாருணர்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அம்மாவுக்கு

அன்புள்ள அம்மாவுக்கு
பாசமுடன் உன்
இளைய மகன் நான் எழுதிக் கொள்வது
நலம், நலமறிய ஆவல்

அம்மா நான் இப்போது
ஆச்சிரமத்தில் நன்றாகப் படிக்கிறேன்
ஆனாலும்
உங்களை நினைத்தால்தான்
கவலையாக உள்ளது அம்மா

அப்பா மிதிவெடியில் காலை இழந்த போதும்
அப்பப்ப சுற்றிவளைப்பில்
பிடிபட்டு வதைபட்ட போதும்
காணாமல் போனோர் பட்டியலில் கலந்து
காணாமலே போனபோதும்
காடையர் கூட்டத்தால்
உன் கற்பு பறிபோன போதும்
சிறைப் பிடித்து உன்னை
வதை முகாமில் அடைத்த போதும்
எதுவுமே செய்யாத என் சுற்றமும் சொந்தமும்
இப்போது மட்டும் உன்னை பற்றி
தப்பாக கதைப்பதைக் கேட்டு
என் மனசு வலிக்கிறது அம்மா

எப்போதாவது விடுமுறைக்கு ஒருகால்
குருகுலம் விட்டு வீடு போகும் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனாதை என்ற சொல் கேட்டு
ஆடிப் போகிறேன் அம்மா

என்னை அவர்கள்
கோபத்தில் திட்டும் போதுகூட
உன்னையும் ஓரிரு கெட்ட சொற்களால்
திட்டுவது கேட்டு என்
மனம் கொதிக்கிறது அம்மா

எனக்கு என் வீடு பிடிக்கவில்லை
என் உறவுகள் பிடிக்கவில்லை

என் அன்புள்ள அம்மாவே
எப்போதும் போலவே உன் வரவை மட்டும்
எதிர்பார்த்து நிறைவு செய்கிறேன் அம்மா
மறுபடியும் என்னை பதில் கடிதம் போட்டு
ஏமாற்றி விடாதே அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா பயம்

காலம் பொன் போன்றது
இப்போதைக்கு விட்டு விடுங்கள்
உயிர் அதைவிடப் புனிதமானது
பயணத்தை நிறுத்துங்கள்

உலகை உருவாக்கும் முயற்சியில்
உங்கள் வாழ்க்கையை ஒப்புவியுங்கள்

கண்களில் ஒளிக்கீற்றை வரவழைத்து
மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள்
நம்பிக்கை என்ற ஒரு சிறு சொல்லே
காலத்தை மாற்றும் அற்புதம் என்று நம்புவோமாக

இதயத்துடன் இதயம் பேசுவோம்
சொற்கள் மௌனித்து போகுமுன்
உமக்காய் இன்னும் உம் மக்களுக்காய்
உங்கள் கைகளைக் கழுவுங்கள்

மரணத்துக்காய் திறக்கப்பட்ட பெருங் கதவை
முழுவதுமாய் மூட உதவுங்கள்

வெற்றுச் சாளரங்களின் வழியே
உலகை ரசியுங்கள்
மூப்பர் யாரையும் வெளியில் அழையாதீர்கள்
அண்டை வீட்டாரிடம்
ஒரு சிறு கையசைப்புடன் விடைபெறுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்காகவும் உம் மக்களுக்காகவும் மன்றாடுங்கள்
ஆம்
தனிமை பயமானதுதான்
ஆனால்
நோய் அதைவிடப் பயங்கரமானது

காலம் பொன் போன்றது
இப்போதைக்கு விட்டு விடுங்கள்
உயிர் அதைவிடப் புனிதமானது

சிலகால அமைதிக்கு பின் மீண்டும் கூடலாம்
கூடி நாங்கள் ஒரு புது உலகம் செய்யலாம்.

(கோவிட் பெருந்தொற்று தொடங்கிய போது எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ப்பனை இழந்த மந்தைகள் – 2

காட்டுமிராண்டித்தனமாகவும்
நயவஞ்சகமாகவும்
எம் முன்னோர்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர்
அனைத்துமே மாறிப்போயின

மக்கள் அனைவரும்
கொடிய விலங்குகளிடையே
சிறைப்பட்டுக் கொண்டனர்
எங்கள் மண்ணில் நாங்கள்
தலை நிமிர்ந்து நடக்கும் உரிமை மறுக்கப்பட்டது

கனவான்களாகவும் கடவுளர்களாகவும்
எங்களில் தங்களைத் திணித்தபடி
எங்கள்மேல் தங்கள் வன்மங்களை
கொட்டித் தீர்க்க முடிவெடுத்த பின்னர்
மீட்பர்கள் என்று தம்மைத் தாமே அழைத்தபடி
எம்மைச் சூழ்ந்து கொண்டனர்

காலம் கடந்த பிறிதொரு நாளில்
மறைந்திருந்து பாணங்கள் ஏவுவதில் வல்லவர்கள்
மீண்டும் நாவாய்கள் ஓட்டி
புதர்களைக் கடந்து கரையைத் தொட்டனர்

நஞ்சு தடவிய பாணங்கள் நடுவில்
பிஞ்சுகள் கூட வெந்து வதங்கினர்
வன்மங்கள் கொட்டி
மீளமுடியாத ரணங்களை மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமுடிந்த அவர்களால்
சிதறும் காயங்கள் நிலைபெற்றன

புண்ணாகிப் போன நெஞ்சுகள்
கனம் தாங்காமல் வெந்து வதங்கின

அன்று

போரின் கனதிக்கு மத்தியிலும்
ஒரு பெரு வாழ்வு இருந்தது
அனேகமாக எல்லாரும் போனபின்னர்
எல்லாமே கனவாகிப் போயின

இரைச்சல் மட்டுமே மீதமாகிய
இன்றைய வாழ்வில்
முடிந்தவரை குனிந்த தலை நிமிராமலேயே
நகர்கிறது வாழ்க்கை

குரூரத்தால் மட்டுமே நிரப்பப்பட்ட
மிருகங்களிடையே
எங்கள் வாழ்வனைத்தையும் இழந்தோம்

சிதைந்து போன கிராமங்கள் நடுவில்
மனிதர்களைத் தேடி அலைகையில்
மனிதர்கள் மீண்டும்
கூடிவிடக் கூடாது என்பதற்காகவே
நிறுத்தப்பட்டவர்களின் கூரிய ஈட்டிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடல் வரை பாய்கின்றன

ஆசிர்வதிக்கப்பட்ட மரணத்தை விதைத்தபின்
வெற்றுடலில் தம்
வன்மத்தைக் கொட்டித் தீர்க்கிறார்கள்

இந்தக் கவிதை எழுதப்படுகின்ற போதே
என் இனத்தில் ஒருவன்
காணாமல் போகலாம்
என் இனத்தில் ஒருத்தி
கற்பழிக்கப்படலாம்
என் இனக் குழந்தைகளின் வாழ்வு
சிதைக்கப் படலாம்
இன்னும் என்னென்னெமோ நிகழலாம்

எதுவும் இங்கே சாத்தியம் என்ற பிறகு
பின் எது நடந்தால்தான் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போன வாழ்வு

இன்றைய மாலைப் பொழுதில்
விசாரணைக்கென வந்திருந்த
இராணுவ அதிகாரியின்
அதட்டல் நிறைந்த விசாரணையில்
நான் ஆடிப்போய் விட்டேன்

வழமை போலன்றி
ஒரு சிறிய மாற்றம் தெரிந்தது அவனிடம்
அப்பா பற்றியும் அம்மா பற்றியுமான
அதிக விசாரிப்புக்களிடையே
என்னைப் பற்றிய கேள்விகளிலேயே
குறியாக இருந்தான்

விவிலியத்தில் வருவது போல
ஆடு தொலைத்த இடையனின் ஏக்கமோ
காசு தொலைத்த பெண்ணின்
வருத்தமோ என்னிடம் இல்லை
ஏனெனில்
நான் என்னையே தொலைத்திருந்தேன்

காணமல் போனது
ஆடோ அன்றிக் காசோ அல்ல
என் வாழ்க்கை
என் உயிர்

காணாமல் போன
என் அப்பாவின் படத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா
எதற்காக ஊர்வலத்தில் கலந்து கொண்டாளோ
அந்த ஒரு காரணத்துக்காகவே
இன்று
அவளும் காணாமல் போயிருந்தாள்

இந்த இரவு விடிவதற்குள்
எதுவும் நிகழாது விடில்
நாளைய தினம் அம்மாவின் படத்துடன்
நானும் காணமல் போவேன்

அதன் பின்
ஐ. நா வரும்
அயல் நாடுகளின் அதிபர்கள் வருவார்கள்
கூடி இருந்து விருந்துன்பர்
விடைபெறும் முன்னே
அவர்களையே விசாரித்தறியும்படி
அறிக்கைவிட்டுச் செல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் தினம்

இலக்குகளை நோக்கிய பயணத்தில்
அடி சறுக்கி மூச்சு முட்டி வாய் மண்தொட்டு
உதடு சிதறுண்டு செங்குருதி சிந்திடினும்
இலக்கே கொள்கையென்று
நேர்வழியில் வீறுகொண்டு
தொழில் முடித்து காத்திருப்போம்
தொழிலாளர் நாங்கள்

செய்யாதே என்றால்
செய்யாமல் இருப்பதற்கும்
செய் என்றால்
செய்வதற்கும் பழக்கப்படுத்தப்பட்டு
பலமாய் சபிக்கப்பட்ட பூமிப் பந்தில்
நாதியற்று நாட்கள் கழிப்போம்

துரதிர்ஷ்டவசமாக நாம்
எம் வாழ்வை உம்மிடம் ஒப்படைத்து
உமக்கான பயணத்தில் எம்மை
நாம் தொலைத்து
வாக்குறுதிகளை நம்பி
காத்திருந்து காலம் கடத்துவோம்

நாயென நீவீர் எட்டி உதைப்பினும்
வேறுவழி யாமறியோம்
முன் சிரித்து பின் கூறு போடும்
துரோகங்கள் நிறைந்த உம்மிடம்
எங்கள் வலி சொல்லத் திரட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் எல்லாம்
சூனியமாய் பொருளிழந்து மாயமாகின

இதோ வருகிறது தொழிலாளர் தினம்
வாருங்கள் முதலாளிகளே
வாய் கிழிய அரசியல் பேசுங்கள்
இன்னும் உங்களிடம் எஞ்சியுள்ள
வெற்று அறிக்கைகளை அள்ளி வீசுங்கள்

தொழிலாளர் இரத்தம் தோய்ந்த
(சிவப்பு) கொடியுடன்
முடிந்தவரை முன்வரிசையை நிரப்புங்கள்

தொழிலாள நண்பர்களே
ஒன்றாக வாருங்கள்
புகார்களுக்காய் வேண்டி
யாரிடமும் இறைஞ்சாமல்
சிரித்தால் சிரித்திடவும்
முறைத்தால் முறைத்திடவும் கற்றிடுங்கள்

வலி மறந்த மகிழ்ச்சி வேண்டி
துன்பக் கடலில் இருந்து பெருநகர் மீண்டு
உங்கள் நினைவின் பெட்டகத்தில்
சேர்த்து வைத்த வியர்வைத் துளிகளுக்கான
விலையை கேளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபிக்கப்பட்டவர்கள் கனவு

எனக்கு உள்ளே ஒரு நெருப்பு
கனன்று கொண்டிருக்கின்றது
மன அழுத்தம்
சிதலூரும் காயங்கள்
மற்றும் நெஞ்சு நிறைந்த வலிகள்
எல்லாம் ஒன்றுகூடி
ஒவ்வொரு நொடியும் என்னை விரட்டுகின்றன

இருள் ஆழமாக
என்னைப் பின்தொடர்ந்து வருகிறது
மிகவும் சிக்கலான கோடுகள்
என்னைச் சுற்றி வரையப்பட்டன

என் சுதந்திரம் சிறைபிடிக்கப்பட்டபோது
யதார்த்தம் செத்துப்போனது

நட்சத்திரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக
உதிர்ந்த பின்னிரவில்
நிலவு மறைந்து போனது
மீளா இருள் எங்கும் வியாபித்தது

மின்மினிகள்
ஒன்றன் பின் ஒன்றாக
வரிசை கட்டிப் பறந்தன
நீரோடி வியாபித்த நீர்நிலைகள்
வற்றி வறண்டன
பள்ளத்தாக்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்குநூறாகப் பிளவுபட்டன

கண்ணுக்கெட்டிய திசையெங்கும்
கந்தகப் புகை வியாபித்தது
மின்னலுடன் இடி முழக்கம் வானதிர்ந்தது
மிருகங்களின் உறுமல் சத்தம்
இதயத்தை ரணமாக்கியது

இரவின் கறுப்பில்
இருண்ட வெற்றிப் பதாகைள்
காற்றில் அசைந்தன

பேயின் நகம் பட்ட மோசமான கீறல்கள்
பெருவலியெடுத்தன

போர் முடிவுக்கு வந்த பிறகு
பற்கள் மற்றும் நகங்களை நிமிர்த்தியபடி
பேய்கள் அங்குமிங்கும் உலாவின

எங்கள் சொந்த நிலத்தை விட்டு
வெளியேறும்படி
அவர்கள் வானதிரக் கூவினர்
ஒருவர் பின் ஒருவராக
சிறைப்பட நடந்த மக்களின்
கூக்குரல்கள்
அவர்களின் காதுகளைச் சென்றடையமுன்
செத்துச் செயலிழந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரிகளின் மூச்சு மக்களுக்கு
விஷநெருப்பை சுவாசிக்கத் தந்தது

எங்கள் இனிய வாழ்க்கையின் மீது
நிலவொளியின்
இருண்ட பக்கங்கள் நுழைந்தன
ஆனாலும்
பிரபஞ்சத்தின் அனைத்தையும்
பார்க்கும் உணர்வு மட்டும்
இன்னும் இழக்கப்படவில்லை

நரக கோபத்தில் பிறந்த
மின்மினிப் பூச்சிகள்
அழிந்தவர்களின்
கடந்தகால பாவங்களை அள்ளிக்
கோபத்தில் வீசின.
அடர் மிகு இருளில்
அந்தி பேய்கள்
நிழல் உலகின் தாதாக்கள் போல
நிமிந்து நின்றன

நான் முன்போல்
மிகவும் சுதந்திரமாக இயங்க விரும்புகிறேன்
மிளிரும் நட்சத்திரங்களைக் கண் முன்னே
காண விருப்பம் கொள்கிறேன்

முன்னொரு காலத்தில் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்றம் கலந்த
பயங்கரமான பயத்தின் சுவட்டால்
தூங்குவதற்காக அழுதேன்
ஆனால்
நான் இப்போது கண்ணீர் விடமாட்டேன்
ஏனெனில் நாங்கள்
டான்டேலியன்களைப் போன்றவைகள்
எந்தத் தழும்புகளுக்கும் மருந்தளிக்கும்
வல்லமை படைத்தவர்கள்

நான் நிம்மதியாக பறக்கும்
பில்லியன் பறவைகளில் ஒருவன்
எனக்கு நன்கு தெரிந்த
என் நிலத்தில் என்னை விட்டு விடுங்கள்.
என் அற்புதமான காடுகளில் மட்டுமே
என் மகிழ்ச்சியைத் நான் தேடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஏதிலியின் குரலற்ற அழுகை

ஓர் ஏதிலியின் குரலற்ற அழுகையில்
எண்ணற்ற வலிகள்
வேதனைகள் நிறைந்திருக்கும்

தேன் தடவிய பொய்கள் மூலம்
நான் நன்றாக இருக்கிறேன்
என்று சொல்கிறேன்
அதைத்தானே நீங்கள் விரும்புகிறீர்கள்

நீங்கள் கேட்க விரும்புவதை மட்டும்
கேட்ட மகிழ்வில்
நீங்கள்
புன்னகைத்து தலையசைக்கிறீர்கள்

சில தருணங்களில்
நான் உடைந்து மூழ்குகிறேன்
ஆனால்
நீங்கள் அப்போது
விலகிச் செல்கிறீர்கள்
ஒன்றும் புரியவில்லை என்பதுபோல்
சிரித்துவிட்டுத் திரும்புகிறீர்கள்

என் வாழ்க்கை மகிழ்ச்சியற்றது
முடிவில்லாத
தாங்க முடியாத
இந்த எண்ணங்கள் மற்றும் அச்சங்கள்
என்னை விட்டுத்
தொலைதூரம் போவதெப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மௌனமாக கண்ணீர் சிந்தும்போது
எங்கள் குழந்தைகளின்
எதிர்காலச் சந்ததியின்
வாழ்வை எண்ணி நான்
பிரார்த்தனை செய்கிறேன்

சில நேரங்களில் யாரோ ஒருவர்
என் அருகில் அமர்ந்து
என் கண்ணீரைத் துடைக்கிறார்
நான் உன்னைப் பார்க்கிறேன்
உன் குறைகளைக் கேட்கிறேன்
என்று ஆறுதல் சொல்கிறார்

தூக்கத்தில் இருந்து எழுந்தபோது
அவையும் நிலையற்றுக் காற்றில் பறந்தன
என் குரலற்ற அழுகையை
மென்று விழுங்கியபடி
மீண்டும் நான் புன்னகைக்க ஆரம்பிக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளைத் தேடி அலைபவன்

என்னிடம் என்
வீட்டைப் பற்றிய கனவு இருந்தது
ஆனால் அது
அந்நிய பூமியிலாகிவிட்டது

இரத்தம் மற்றும் கண்ணீரால்
போர் எங்கள் வாழ்வில்
எழுதப்பட்ட கதை

முன்பொரு காலத்தில் நான்
சோகமாகவும் தனிமையாகவும் இருந்தேன்
ஆறுதல் சொல்ல அப்போது யாரும் இல்லை

என் உணர்வுகளை மறைக்க
சிரிக்கும் முகமூடியை அணிவதற்கென்றே
ஒரு சிறப்புப் பயிற்சி பெற்றிருந்தேன்

வெகு காலத்திற்கு முன்பு
என்னிடம்
பல நண்பர்கள் இருந்தனர்
ஏறக்குறைய எல்லோரும் போன பின்னர்
நான் என் வெறுமையை உணர்ந்தேன்
என் அழுகையை கேட்க
அப்போது யாரும் இல்லை

என் எல்லா புன்னகைக்கும் பின்னாலும்
என் வலிநிறைந்த கண்ணீர் இருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சங்கள் நிறைந்த இவ்வுலகில்
ஆறுதல் சொல்ல
யாரும் முன்வரவில்லை

என் அழுகையை நிறுத்தும் அந்த நாளை
இன்றுவரை நான் தேடிக்கொண்டிருக்கின்றேன்

அதுவரை

நான் அணிந்திருக்கும்
இந்த முகமூடியின் பின்னால்
ஒழிந்து கொண்டிருப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறக்க முடியாத பறவை

இச் சிறிய பறவை இப்போது
நீல வானத்தைப் பார்க்கிறது
முன்போல் அதனால்
வானத்தை இன்னும் முழுமையாகச்
சொந்தம் கொண்டாட முடியவில்லை

இப்பறவையை இப்போது
யாரும் பார்க்க மாட்டார்கள்
இப்போது இதனால் அரிதாகவே பறக்க முடிகிறது
அதன் உடைந்த சிறகுகளை சரிசெய்ய
அங்கு யாரும் வரமாட்டார்கள்

ஒரு காலத்தின் சுதந்திர பறவை இது

காற்றின் மிதப்பில்
வானத்தை உரிமை கொண்டாடியபடி
மேல்நோக்கி
மற்றும் கீழ்நோக்கி மிதந்தது

இறக்கைகள் வெட்டப்பட்டு
கால்கள் கட்டப்பட்ட பின்னர்
கூண்டுப் பறவையாகி
பறப்பதற்கான மற்றும் பாடுவதற்கான
சுதந்திரம் மறுக்கப்பட்டது

இன்னும்
எண்ணற்ற கனவுகளைச் சுமந்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றில் எம்பிப் பறக்க முயல்கிறது

எண்ணற்ற முயற்சிகள்
தோல்வியில் முடிந்தன

இறப்பதற்குள் தன் எல்லைவரை
தன் சொந்தக் காட்டின் தென்றலை
முகர்ந்துவரும் நினைவுகளுடன்
இழந்துபோன தென்றலை நினைத்தபடி
ஒரு நிழல் கனவில் அலறுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சியை தவறவிட்ட நாட்களில்

காற்று என் காதுகளைக் கடந்து சென்றது
கண்களை மூடிக்கொண்டேன்
பாறைகளில் மோதி விழும் அலைகள்
உரத்து இரையத் தொடங்கின

இரைச்சல் நிறைந்த வாழ்வில்
ஒரு அமைதியை நான் தேடியலைகிறேன்
என் கடிகாரதிற்கு
இப்போது வேலையில்லை

மெல்லென வீசும் தென்றல்
என் ஆன்மாவை அமைதிப்படுத்துகிறது
பிறகு நான் கடலைப் பார்க்கிறேன்
சூரியன் மேகங்களில் இருந்து நழுவி
கடலில் வீழ்ந்து மாண்டு போனது

இரவு நெருங்கியது
அற்புதமான இரவு
அழகான வானில் நிலவு காய்ந்தது
நான் இருக்க வேண்டிய இடம்
இதுவென்பதாக உணர்கிறேன்.

இது போன்ற நாட்களே
என் வாழ்வின்
உண்மையான பொக்கிஷமாகக் கருதுகிறேன்

என் மகிழ்ச்சியை தவறவிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கடினமான நாட்களில்
அலைகளைக் கேட்டு நான்
தொலைந்து போயிருக்கலாம்
பறவைகளின் பேச்சைக் கேட்டு
மேகங்களின் அசைவை ரசித்தபடி
கண்களை மூடி நான்
உறங்கிப் போயிருக்கலாம்

பாறைகளில் அலைகள் மோதி
என் இதயத்தின் மகிழ்ச்சிக் கதவுகளைத்
தட்டித் திறந்தன

நான் இப்போது அமைதியை உணர்கின்றேன்
என் மனம் இப்போது தெளிவாக உள்ளது
இரவு நெருங்கி வருவதற்கு நேரமாகிவிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்று ஊளையிடுகிறது

கனவில் இருந்து விழித்தேன்
காற்றின் ஓசை
அதன் கை முட்டிகளை ஓங்கி
என் சாளரங்களுக்கு எதிராக அடிக்கிறது

உறை பனியில் குளிர்ந்த கண்ணாடியில்
அங்கங்கே விரல் நகக் கீறல்கள்

அரை விழித்த குழந்தை போல்
இல்லாத ஒன்றைத் தேடி
அறை முழுவதும் தேடுதல்

காற்று இன்னும் ஊளையிடுகிறது
பசித்திருந்த ஓநாயின்
துக்ககரமான அழுகை போல
காற்று இன்னும் ஊளையிடுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ கொன்ற எதிரி நான்தான் தோழா

நான் ஒரு
கொடிய போரில் இருந்து தப்பித்தேன்
சில ஆழமான காரணங்களுக்காக
அங்கு போர் வேரோடி வியாபித்திருந்தது

மரணத்தை யாராலும் தூண்டிவிட முடியாது
ஆனாலும் துன்பகரமான வாழ்க்கையில்
மரணங்கள் அங்கு விதைக்கப்பட்டன

கிட்டத்தட்ட எல்லாமே முடிந்து போனபின்
நரக வேதனையிலும்
புன்னகைப்பதுபோல் பாவனை செய்தோம்

மனிதர்கள் சிரித்திருக்கலாம்
ஆனாலும் அவர்தம் கண்களில் அமைதி இல்லை

அழுகையில் ஏதோ ஒன்று தொக்கி நின்றது
சொல்லப்படாத உண்மை
போரின் பின்னைய பரிதாபம்
மற்றும் இன்னும் பல

விசித்திரமான நண்பர் ஒருவர் சொன்னார்
இங்கு புலம்புவதற்கு எந்த காரணமும் இல்லை
என்று

அன்புத் தோழா
இந்த இருட்டிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை நான் அறிவேன்
நீ கொன்ற எதிரி
நான்தான் தோழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஒரு முரண்

அவர்கள் இப்போது என்னிடம்
அளவுக்கதிகமாகப் பேசுவதில்லை
அவர்களின் வாய்கள் இப்போது
பணப்பைகளால் நிரப்பப்பட்டுள்ளன

வார்த்தைகளற்ற பார்வையால்
மீண்டும் மீண்டும்
என்மீது தாக்குதல் தொடுத்தனர்

இப்போது
நான் ஒரு முரண்
ஒரு செக்கிழுக்கும் மாடு

நான் ஒரு
மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பல்
போராடும் கலைஞன்

இன்னும் கொஞ்சம் நம்பிக்கை இருக்கிறது
அடிவானில் சிவப்பு நிறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதை நாம் பார்த்திருக்கிறோம் நண்பரே

மேலைத்தேச நண்பரே
நீங்கள் எதை இன்று பார்க்கிறீர்களோ
அதை நாங்கள்
பார்த்திருக்கிறோம்நண்பரே

உண்மையான உணர்ச்சிகள் கொப்பளிக்கின்ற
சோகத்தின் ஆழத்தை நாம் அனுபவித்திருக்கிறோம்

போரின் நடுவே
வளர்ந்த குழந்தைகள் நாம்
ஆதலால் பலமுறை நாம்
சொர்க்கத்தை உணர்ந்துள்ளோம் நண்பரே

மரணத்தின் வேதனையை
தனிமையின் கொடுமையை
கொடிய வறுமையை நாம் எதிர்கொண்டோம்

பசியின் உக்கிரத்தில்
பலநாள் தவித்திருக்கின்றோம்
போரின் நடுவே
நம் இளமையைத் தொலைத்தோம்
தினமரணத் துக்கத்துள் தவித்தோம்

நாம் விடும் ஒவ்வொரு மூச்சிலும்
எம் மண்ணின் ரணம் கலந்துள்ளது

பட்டவனுக்குத்தான் நோவு தெரியும் நண்பரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால் சொல்கிறோம்
எங்கொருவன் குண்டு மழையில்
செத்து மடியும்போதும்
எங்களுக்கும் வலிக்கிறது நண்பரே

உங்களுக்கு வலிக்கும்போது
எங்கள் இதயத்தின் ஒரு சிறு ஓரம்
இறந்துவிடுகிறது நண்பரே

நாங்கள் எம் இதயத்தையும் ஆன்மாவையும்
உங்களிடம் காட்டுகிறோம்
எங்களிடம் சாக்குப்போக்குகள் இல்லை
மறைக்க எதுவும் இல்லை
எப்போதும் நாம் வழங்கக்கூடியது
எம் அன்பை மட்டுமே.

290709



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் என்னைக் கட்டவிழ்த்து விட்டது

விசித்திரமான நிகழ்வுகள் நிறைந்த
வாழ்க்கையில் வரலாறு முக்கியமானது
அது என்னை விட
என்னை அதிகம் அறிந்தது

துயரங்களைக் கடக்க
கடினமான நாட்களில் காலத்தைக் கழிக்க
வலி நிறைந்த அத்தருணங்களை எதிர்கொள்ள
இன்னும் என்னென்னமோ கற்றுத் தந்தது

காலப் பெருவெளியில் சிக்கி
நான்
சுழலில் சிதைந்த பந்துபோல்
பேரழிவுகளுக்கிடையில் அலைந்தேன்

பெருங்கடலின் ஆழத்தில்
தொலைந்து போன
ஒரு பேய்க் கப்பலானேன்

சில சமயங்களில் நான்
மென்மையான நித்திய ஒளியில்
என் உயரிய நேரத்தை இழந்தேன்

இன்னும் சில நேரம்
கனவுகள் பிடிப்பவர்களின்
கைகளில் நான் அடைபட்டிருந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் என்னைக் கட்டவிழ்த்து விட்டபின்
என் கைகளை நீட்டி
நான் சுதந்திரமாக பறந்தபோது
நான் உணர்ந்தேன்
என்னாலும் பறக்க முடியும் என்று
நான் ஒரு சுதந்திரப் பறவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோ–ஹோம்

எச்சரிக்கைக் காட்சிகளால்
சிறகுகள் வெட்டப்பபட்டு
நசுக்கப்பட்டபோதும்

எங்களை அடக்கவென்று
வெறுப்பின் மேலாதிக்க விஷவன்மங்கள்
கொட்டி வரையப்பட்ட
சட்ட மூலங்கள்
நிறைவேற்றப்பட்ட போதும்

நித மரணத்தால் மட்டுமே
ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய்
குற்றமேதுமின்றி இன்றுவரை பலர்
சிறைவாயிலை
நிறைத்துக்கொண்ட போதும்
எங்களுக்கு எதிராக அவர்களின் கதவுகள்
இன்னும் மூடப்பட்டே இருக்கின்றன

தொலைந்துபோன தன் பிள்ளையை
கைதுசெய்யப்பட்ட தன் தந்தையை
கையளிக்கப்பட்ட தன் தமையனை
இன்னும் தேடியபடி
நீதிக்காக
அவர்தம் விடுதலை வேண்டி
எத்தனை நாட்கள் தவம் கிடக்கிறார்கள்

எங்களுக்கு வலித்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்துப்போன உங்களின்
நீதிக்கான குரல்கள்

இன்று

நீதி என்ற சொல்லை
அடிக்கடி உச்சரிக்கின்றன

இப்போது அங்கே
தலைநகரின் வீதிகள் தோறும்
ஆட்சியாளர்களுக்கு
எதிரான கோஷங்கள் மலிந்துள்ளன
வீட்டிற்கு செல்
என்ற கோஷம் தவிர
எதுவும் காதில் விழுவதில்லை

காலத்துயர் மறந்து
தமிழா நீயும் போராட வா
என்றால்
எதை நாம் மறப்போம்
எப்படி நாம் வருவோம்
கொடிபிடிக்க உன்னுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழுவத்தை காவல் செய்கிறது ஓநாய்

இருள்வாய் உமிழ்ந்த
கந்தகப் புகை சூழ் முன்னொரு நாளில்
நரபலி நிகழ்ந்து
ஆண்டுகள் கழிந்தன

முற்றுகைக்குள்ளான தீவாய்
முடங்கியது சுதந்திரம்

ஆசீர்வதிக்கப்பட்ட விடியலுக்கான
நாளொன்றின் வரவுக்காய்
இன்னும் தொடர்கிறது காத்திருப்பு

இறுகிய மனம் போல
இருண்ட இரவுகளில்
புகார் செய்வதைத் தவிர
வேறெதுவும் தெரியவதில்லை

முடிவிலாப் பெருவெளியில்
அகப்பட மறுக்கும் நாட்களில்
படுக்கையின் வெறுமைக்குள்
ஒளிவதைத் தவிர
வேறெதுவும் புரியவில்லை

அசரீரி குரல்கள்
ஆளுறக்கத்தைக் குலைத்தன
நீண்ட இரவுகள் வடித்த
அரைகுறை விடியலில்
காலை விடிந்ததெனக் கூவைகள் கூவின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும்

கொல்லைப் புறத்துச் சாம்பல் மேட்டில்
காவலுக்கு நாய்கள்
ஆட்டுத் தோல் மீது அமர்ந்தபடி
தொழுவத்தைக் காவல் செய்கிறது ஓநாய்
இருள்சூழ் தெருவில்
காவலர்கள் போகிறார்கள்
நாளை என் வீட்டில் திருடர்கள் வரலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிசாசுகளின் பரிசுகள்

பல ரகசியங்கள் அடங்கிய பழைய
குறிப்புகளைப் படிப்பது போல
ஒவ்வொன்றாகப் புரட்டுகின்றேன்

முன்னொரு காலத்தில் மறந்து விடப்பட்டவை
நினைவுகளாக இன்னும்
எம் ஆளுறக்கத்தில்
எம்மை வேட்டையாடுகிறன

அன்றொருநாள் விடியற்பொழுதில்
அவர்கள் வந்தார்கள்
அவர்களின் பூட்ஸ் சத்தம்
எங்கள் இதயங்களை நொறுங்கச் செய்தது

மரணத்தைக் தரும் சீருடையில்
பிசாசுகள் எங்கள் வீடுகளை நோக்கி
அணிவகுத்துச் சென்றார்கள்

முகமூடி அணிந்தவர்களின்
நீட்டப்பட்ட துப்பாக்கிகள்
மற்றும் டாங்கிகள்
எங்கள் சாலைகளை மறைத்தன

காலை விடிவதற்குள்
எங்கள் கனவுகள் கலைந்தன
எங்கள் சுதந்திரம் சிறை பிடிக்கப்பட்டு
போரையும் இரத்தத்தையும்
மற்றும் பிணங்களையும்
பரிசாகத் தந்தன பிசாசுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரியும் போது தீயாகவே இருப்பேன்

வித்தகக் கவி நானென்று
விண்டுரைக்க வரவில்லை
முத்திரைக் கவி நானெழுதி
மூண்டெள முயலவில்லை
கொத்துக் கொத்தாய் எம்மவர்கள்
செத்து விழுந்தபோதும்
தத்துவங்கள் பேசியிங்கே
தரித்திரராய் வாழ்ந்திடுவோம்

மன்னுயிர் மண்மேல் வீழ்ந்து
மடிந்திடும் நிலைதான் கண்டும்
என்னுயிர் பிளைத்தல் வேண்டி
ஒதுங்கிநான் நிற்கக் கண்டு
முன்வாயிற் சொற்கள் சேர்ந்து
முரண்டு பிடித்தெனைக் கொல்ல
என்னுடல் நிமிர்ந்து நானும்
ஏற்றந்தான் காண்பதெப்போ

சாப்பாடு இன்றியங்கே
தமிழ்ச்சாதி சாகக்கண்டும்
காப்பீடு ஏதுமில்லாக்
காரியங்கள் நாங்கள் செய்து
ஏற்பாடு ஏதும் இன்றி
ஆர்ப்பரித்தே எழுந்திடாமல்
கூப்பாடு போட்டு இங்கே
கும்மாளம் போட்டிருந்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லில் இருந்து வெளிப்பட்ட
அம்புபோலத் தமிழ்ச்
சொல்லில் வார்த்தெடுத்தென்
ஆத்திரத்தைக் கொட்டி நல்லாய்
கல்லில் வடித்த சித்திரம் போல்
கவியெழுதி வைத்திருக்க
நல்லில் சொற்கள் இவையென்று
நவின்றதனைத் தூற்றிடுவர்

வெட்டிப் போட்டு எங்கள்
தமிழ்ச்சாதி மரித்த போது
தட்டிக் கேட்டு அங்கே
தடுத்தவர் யாருமில்லை
கொட்டித் தீர்த்து எந்தன்
கவிவரியை நான்வடித்தால்
தட்டிக் கழித்த பின்னரதில்
அரசியல் வாடை அடிக்கிறதென்பர்

மனக்கோலம் போட்டு நல்லாய்
மாண்புடனே வாழ்ந்த போதும்
வனக்கோலம் பூண்ட பின்னர்
வாழ்ந்ததெல்லாம் இழந்தபோதும்
தினக்கூலி வேலை செய்து
உயிர் பிளைத்து வாழ்ந்த போதும்
மனப்பிரமை பிடித்து நாங்கள்
மண்டியிட்டுப் போகவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநியாயம் கண்டு எந்தன்
பேணாமை கண்ணுதிர்த்தால்
இதுஞாயம் இல்லையென்றென்
கவி வரியைக் கொய்யநிற்பர்
எதுஞாயம் என்றெனக்கு
எதுவுமே தெரியாதா
புதுஞாயம் வேண்டாம் புவிமேலே
நானும் மானிடந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி சுமந்த பயணம்

விழியிரண்டும் குழிவிழுந்து
மொழியிழந்து முகம்வாடி
உடல் மெலிந்து தள்ளாடி
நடைபோகும் பயணமிது

ஊரிழந்து உறவிழந்து
ஊணுறக்கம் தானிழந்து
உண்ணவழி ஏதுமின்றி
கொடியதொரு பயணமிது

சுற்றிவர நரிக்கூட்டம்
நடுவில் நாமோஉ ஆட்டு மந்தை
வெட்டவெளிப் பூமியிலே
வெறுங்கையாய் நடைப்பயணம்

முள்வேலி முகாம் நோக்கி
யாதொன்றும் பிழைபுரியாப்
பாவியரின் நடைப்பயணம்

பூனைகளின் குகை நோக்கி
சுண்டெலிகள் நாங்களிங்கே
ஏதிலியாய்ப் பாவியராய்
பயணிக்கும் நேரமிது

வேறுதுணை யாருமின்றி
வேறுவழி ஏதுமின்றி
மிச்சசொச்ச உசிரை நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க வைக்கும் பயணமிது

பச்சை இளங்குருத்தை
பாசமுள்ள கண்மணியை
வேள்வியில் பறிகொடுத்து
போகின்ற பயணமிது
கண்கள் சிந்தும் பூக்கள் தூவி
வலிகள் சுமந்து புது வழிகள் தேடி
வாய்கள் மூடி மௌனியாகி
வாழ்தல் வேண்டி கால்கள் போகும்
பாதை நோக்கி
நாங்கள் போகும் பயணமிது

(2010 ஆம் ஆண்டு ஒரு தென்னிந்திய
தமிழ் படத்துக்காக எழுதிய பாடல்,
சில பல காரணங்களால் படம் வெளிவரவில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசிப்புக்குரிய குழந்தைகள்

எங்கள் அன்புக்குரிய குழந்தைகளை
இப்போர் சிதைத்துள்ளது

முறையற்ற முறையில்
அவர்களின் வாழ்க்கை திருடப்பட்டது
அவர்களின் புன்னகை திருடப்பட்டது

கேள்விகள் ஏதுமின்றி பிசாசுகள்
அப்பாவிக் குழந்தைகளை
இப் போரில் சுட்டுக் கொன்றனர்

நேசிப்புக்குரிய குழந்தை
தன் தாயின் கண்ணெதிரே புதைக்கப்பட்டது
இதயங்கள் உடைந்து நொறுங்கி
ஊமைக் காயங்கள் நிலைபெற்றன

விடிவு வேண்டி நீண்ட சாலைகளில்
அகதிகள் வரிசையில் நடந்தார்கள்
நீண்ட பயணங்களில்
கொப்புளமாகின பிஞ்சுப் பாதங்கள்

போரில் தப்பிய குழந்தை ஒன்று
மற்றொரு நாள் இறந்தது
தன் குழந்தையின் இறப்புக்கு நீதி வேண்டி
மற்றொரு தாய் அழுதாள்

மற்றொரு நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் இறந்துவிடுகிறாள்
தந்தை இறந்துவிடுகிறார்
மற்றொரு குழந்தை அழுகிறது

இன்னொரு குழந்தையின்
வகுப்பறை மேசைகள் தூக்கி வீசப்பட்டன
மழலையர் இன்றி
பள்ளிகள் தனித்து விடப்பட்டன

தாயை
தந்தையை
உடன்பிறப்பை இழந்த
குழந்தைகளின் பிரார்த்தனை ஒலிகள்
வானை நிறைத்தன

நீல வானம்
மண்டியிட்டு நிலம் தொட்டது
கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடிப் பூமியிலே

ஆள்காட்டி ஆள்காட்டியே
அன்புள்ள ஆள்காட்டியே
தூது செல்ல மாட்டாயோ
சேதி சொல்ல மாட்டாயோ

அன்னை மண்ணே அன்னை மண்ணே
உன்னை இழந்து போகின்றேன்
என் ஆசையுள்ள காதலியாள்
எங்கேயென்று தேடுகின்றேன்

வெட்டைவெளி தாண்டி நாங்கள்
நடைப்பயணம் போகின்றோம்
வாழவழி தேடி நாங்கள்
வழிப்பயணம் போகும் நேரம்
என் பாசமுள்ள காதலியைக்
கைப்பிடிக்க முடியலையே

கிட்டிப் புள்ளு அடித்து நாங்கள்
கெந்தித் தொட்டு ஆடி அங்கே
தொட்டுத் தொட்டுப் பேசி முன்னே
காதல் செய்து மகிழ்ந்திருந்தோம்

சுற்றிவர முள்வேலி
அதன் நடுவே சிறு குடிசை
சிறு குடிசை தாண்டி நானும்
தேடுகிறேன் என் காதலியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்தொலைவில் அவளுருவம்
அசைவதெல்லாம் தெரிந்தாலும்
கைப்பிடிக்க முடியலையே
கண்ணிவெடிப் பூமியிலே

பல் குழல் பீரங்கிபோல்
படபடென்று பேசுமவள்
பாவியாகி நிற்கின்றாள்
பார்த்த மனம் துடிக்குதையா
பாவியாகி நிற்கின்றாள்
பார்த்த மனம் துடிக்குதையா

(2010 ஆம் ஆண்டு ஒரு தென்னிந்திய
தமிழ் படத்துக்காக எழுதிய பாடல்,
சில பல காரணங்களால் படம் வெளிவரவில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் பூர்வீகம் இதுவல்ல

என் மகனே கேள்
என் வார்த்தைகளை நீ கவனி
நான் நிலம் நீங்கிய பறவை

கனத்த இதயத்துடன் முன்பொருநாள்
கண்ணீல் சொரிந்து
என் பூர்வீக நிலம் நீங்கி
இங்கு நான் வந்தேன்
வலசை என்னை புதிய நிலம் வரவேற்று
வளம் பெறச் செய்தது

ஆனாலும் சொல்வேன்
என் மகனே நீ கேள்
இதுவல்ல உன் தேசம்

கனவுகளால் கட்டியெழுப்பப்பட்ட உன் நிலம்
இன்னும் வெகு தொலைவில் உள்ளது

காலச் சுழற்சியில் நிலம் பிரிந்த வலசை நான்
அதன் வலி நீயறியாய் மகனே
என் இதயத் துடிப்பு அறியும் அதன் வலி

பனி சூழ்ந்த இந்நாடு பிறப்பால் உன்னது
ஆனாலும்
சொல்கிறேன் கேள்
என் அன்பு மகனே
உன் பூர்வீகம் இதுவல்ல என்பதை அறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் கடந்த பின்னொரு நாளில்
தாய்நாடு பற்றிய உன் தேடலில்
என் புன்னகையை நினைவில் கொள்
அது உனக்கு வழிகாட்டும்

இன்னும் சொல்வேன் கேள் மகனே
காலவோட்டத்தில்
நமது கோட்பாடுகள் மற்றும் கலாசாரத்தை
நினைவில் கொள்ள மறந்துவிடாதே

முடிந்தவரை உன் தாயை நேசி
தமிழை உன் நாவில் பேசு
அது சித்திரவதை இல்லை
சுகம் தரும் அமிழ்தம் என்றுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு என்பது கனவுகளின் கூடாரம்

வீடு என்பது கனவுகளின் கூடாரம்
அது உன் வீடு தோழா
நான் அறிவேன் அது உன்
கனவுகளால் கட்டி எழுப்பப்பட்டது

ஒருநாள் உன் வீட்டில் பிசாசுகள் நுழைந்தன
பிசாசுகள்
உன் வீட்டின் நாற்காலிகளில்
மற்றும் படுக்கைகளில்
ஒய்யாரமாய் படுத்துறங்கின

உன் வீட்டில் உனக்கான அனுமதி மறுக்கப்பட்டது
உன் கனவுகள் உடைத்து நொறுக்கப்பட்ட
முன்னொரு நாளில் நீ
உன் வீட்டை விட்டு வெளியேறினாய்

யாரும் துரத்தாத வரை
யாரும் வீட்டை விட்டு வெளியேற மாட்டாடிகள்
என்ற சூத்திரம் நானறிவேன் தோழா

ஏனெனில்
வீடு என்பது கனவுகளின் கூடாரம் தோழா

அன்று உன் காலடியில்
நெருப்பு கனன்று எரிந்தது
சூடான இரத்தம் உடலெங்கும் பாய்ந்தது
உயிர் கொல்லும் அச்சுறுத்தல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கழுத்து வரை வந்து நெரித்தது

அன்றைய நாளின் பின்னிரவில் நீ
உன் வீட்டை விட்டு வெளியேறினாய்
உன் கனவுகள் உடைந்து நொருங்க
தாய்மண் நீங்கி விமானம் ஏறினாய்

தோழா
அன்று நீ
விமான நிலைய கழிப்பறையில்
உன் கடவுச் சீட்டின் காகிதப் பக்கங்களை
கிழித்தெறியும் அந்த நொடியில்
என்ன நினைத்திருப்பாய் என்று நானறிவேன்

யாரும் யாருக்காகவும்
கப்பல் ஏறியோ விமானம் ஏறியோ
வீடு பிரிவதில்லை

வசைச் சொல் பாடுவோரே
புரிந்து கொள்ளுங்கள்
வீடு என்பது கனவுகளின் கூடாரம்

தன் வீட்டில்
பாதுகாப்புள்ள எந்தத் தாயும்
தன் குழந்தையை
கப்பலேற்றவோ விமானம் ஏற்றவோ
துணிந்திருக்க மாட்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு லாரியின்
மூடப்பட்ட பெட்டி
வீட்டை விடப் பாதுகாப்பானதா என்ன

தன் குழந்தை
தன் கனவுகளைப் பிரிந்து செல்லும்
அந்தக் கணம்
உன் தாய் பட்ட வேதனை
நான் அறிவேன் தோழா

கனவு வீடு மற்றும் நிலம்
பறிக்கப்பட்ட பலரை
இன்னும் நான்
அகதி முகாம்களில் பார்க்கிறேன்

இன்னும் சிலர் சிறைகளில்
காட்டுமிராண்டித்தனமான வஞ்சகரால்
கூடிழந்த வலசைகள் அவர்கள்

விதியின் சிக்கலான கோடுகளுக்கிடையே
பின்னப்பட்ட போலிச் சுதந்திரத்துடன்
மென்மையாக்கப்பட்ட சொற்கள்
இன்னும் உச்சரிக்கப்படுகின்றன

முந்தைய வாழ்க்கை
மற்றும் சந்தோசமான நாட்கள்
இன்னும் அழைக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதைக்குரிய தலைகள் குனிந்து
முதுகுத் தண்டுகள் வளையத் தொடங்கின

ஒருபோதும் திருப்பிச் செலுத்தப்படாத
சபிக்கப்பட்ட வாழ்வு கிடைத்தபின்
எம் பரிபூரண ஆத்மாவின்
சபதங்களின் குரல் அடங்கிப் போனது

என் அன்புத் தோழனே
ஒரு சிறகு
காற்றில் மிதந்து வருவதைப் போல
எனது நீடித்த கேள்விகளுக்கு
பதிலளிக்க முடியாமல்
அந்தரத்தில் தள்ளாடிய என் உள்மனம்
இப்போது வெளிச்சம் பெற்றது

ஆழ்மனதில் நேசித்த பூமி
நம் நினைவுடன் கலந்தது

இப்போதும் நம் இதயத்திலிருந்து
வீடு மற்றும் நிலம் பற்றிய
உயவுந்த கனவுகள் எழுகின்றன
வீடு என்பது கனவுகளின் கூடாரம் தோழா
நான் அறிவேன் அது உன் வீடு
அது உன் கனவுகளால் கட்டி எழுப்பப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை மண்ணே

அன்னை மண்ணே அன்னை மண்ணே
சோகம் தீர்ப்பாயா
எம் சோகம் தீர்ப்பாயா
கண்ணில் சிந்தும் பூக்கள் தூவி
பாதம் பணிகின்றோம்
உன் பாதம் பணிகின்றோம்

துடுப்பை இழந்த படகாய்
எங்கள் வாழ்க்கை போனதம்மா
வலிகள் சுமந்து புது வழிகள் தேடி
விழிகள் அலைவதேனோ
எங்கள்மொழிகள் இழந்து
மௌனியாகி வாயும் மூடியதேன்

யுத்தம் விளைந்த பூமியில்
நாங்கள் செத்துப் பிழைக்கின்றோம்
தினம் ரத்தம் சிந்திக்
கொட்டும் போர் மழையில்
செத்து மடிகின்றோம்

உண்ண உணவு இன்றி
நாங்கள் வாடை மெலிகின்றோம்
எங்கள் சோகம் தீர்ப்பார்
யாரும் இன்றி
வலிகள் சுமக்கின்றோம்

வீரம் விளைந்த எங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சம் விதையாய் வீழ்ந்ததேனோ
வீணர் கூட்டம் நடுவில்
எங்கள் வீரம் சிறையில் போனதேனோ

காலம் பின்னிய வலையில்
எங்கள் கால்கள் சிக்கியதேன்
கண்ணீர் மழையால் பூமி
நனைத்துக் கலங்கி நிற்பதுமேன்

காலம் கனியும் போது நாங்கள்
வழமாய் வாழ்ந்திடுவோம்
அந்தக் காலம் வேண்டி நாங்கள்
உன் கால்கள் பணிகின்றோம்
தாயே தமிழே
உந்தன் கால்கள் பணிகின்றோம்

(2010 ஆம் ஆண்டு ஒரு தென்னிந்திய
தமிழ் படத்துக்காக எழுதிய பாடல், சில பல
காரணங்களால் படம் வெளிவரவில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களின் வருகை

அவர்கள் எங்கள் வாழ்வில்
சமாதானம் தருவதாகக் கூறிக்கொண்டு
அன்று வானத்திலிருந்து வந்தார்கள்

அவர்கள் அமைதிக்காக வந்துள்ளனர்
அவர்கள் எங்கள் சமாதானம் பற்றி
ஆர்வமாக உள்ளனர்
என்றார்கள் ஆய்வாளர்கள்

அவர்களின் வருகை
எங்கள் காற்றை எரித்தது
அவர்களின் வருகை
எங்கள் சுவாசத்தை குறைத்தது
அவர்களின் வருகை
எங்கள் நிம்மதியைச் சிதைத்தது

அன்று அவர்கள்
சமாதானத்தை கொண்டு வரவில்லை
அவர்கள் இன்னொருவரின் பிரதிநிதியாக
எங்கள் முன் வந்தமர்ந்தனர்

அன்று சமாதானம் தருவதாகக் கூறிக்கொண்டு
வானத்திலிருந்து வந்தவர்கள்
எங்கள் அழுகையை அலட்சியம் செய்தார்கள்

சமாதானம்
அதி சக்தி வாய்ந்த சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மில் பலரை அடிமையாக்கியது
இன்னும் பலரை
நிர்க்கதியாக்கிக் கொன்றது

சமாதானத்தின் முடிவில் எங்களிடம்
மரணம் மட்டுமே மிஞ்சியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் இதெல்லாம் சகசமப்பா

முடிந்தால் கட்டு
கட்டினால் இடி
முடிந்தவரை மௌனமாயிரு
உரத்துக் குரல்கொடு
ஆளுறக்கம் போல் நடி
வீழும்வரை பொறுமை கொள்
வீழ்ந்தபின் உரக்கக் கத்து
அன்பாய்ப் பேசு
வாய்ச்சொல்லை நஞ்சாய் கக்கு
அன்பாய் வருடு
முதுகில் குத்து
நல்லவன்போல் இரு
வேடம் போடு
பழிவாங்கப் பழகு
பாவம் பண்ணத் துணி
காவலனாய் நடி
பழிக்கு அஞ்சாதே
நண்பனைப் பகை
பகைவனைத் துணைசேர்
காலப்போக்கில் நீயும்
நாட்டை ஆள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் தமிழர் அரசியல் தலைமைகள்

திருவிழா வருகிறது
தேர்தல்த் திருவிழா வருகிறது
வீதியெங்கும் விளம்பரப் பலகைகள்
இங்கு
வீணர்களின் வேண்டாப் பேச்சு வேறு

எரிகின்ற வீட்டில் கொள்ளி புடுங்கவென
ஏவிவிட்ட கூட்டங்கள் கூடிப்
போராடித் தோற்றவன் நீயென்று
எக்காளமிடக் கண்டேன்

தமிழருக்கு நாமே காப்பு என்றபடி
அரைத்தமாவை மீண்டும் அரைத்தபடி
மகா பிரபு வந்தார்

காணமயில் வாழ்ந்த ஊரில்
வான்கோழிக்கென்ன வேலை

வருபவர் எல்லாம் வரட்டும்
முதலில் முதுகிற் குத்துபவன்
நானே என்று சொல்லி
உடுக்கடித்து ஆடப் பழகிய
தலைக்கட்டு ராசாக்களாய்
வெளிக்கிட்டு வந்ததொரு கூட்டம்

முள்ளிவாய்க்காலுடன் எல்லாம்
முடிந்து போயிற்றா என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை பேரையும்
புதை குழியில் வித்தைத்தது
நீவீர்
செத்தவர் மீதினில்
ஏறி நடந்திடவா என்ன

வருபவர் எல்லாம் வரட்டும்
முதலில் கதிரை பிடிப்பவன்
நானே என்று
நேற்றுவரை நடந்த சுவடுகள் மறந்து
எவரெவரோ காற்றடங்கள் பற்றி
நக்கிப் பிழைக்கும்
உன்தலை வெக்கிக் குனி

புலி நடந்த ஊரில்
இன்று சுண்டெலிகள்
விளையாடக் கண்டேன்

நெருப்புச் சுடரேற்றி
நிமிர்ந்த பரம்பரை நாம்
வந்தவனுக்கெல்லாம் வால் பிடித்துக்
கற்பகப் பூப்பறிக்கும்
கனவில் மிதக்கலாமோ சொல்

கந்தகப் புகையால் எழுதப்பட்ட வாழ்வு போய்
நிலவு பார்க்கும் ஆசையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம்
இரவுகள் தோறும் விழித்திருக்கின்றோம்

திசை தெரியாப் பெருவெளி நோக்கி
நடப்பதை விடுத்து
பாதி வழி கடந்த பயணத்தின்
மீதிவழி நோக்கி நட

போகும் வழியில் முட்கள் இருக்கலாம்
புதர்கள் தடுக்கலாம்
கால்கள் இடறிக் குழிகள் விழுத்தலாம்
இன்னும் எதுவும் நடக்கலாம்
இலக்கு ஒன்றே குறியெனக் கொண்டு நில்
இல்லையேல் செத்துமடி

290709
14128CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன் இனத்தின், தாயகத்தின் அரசியல், சமூக ஆன்மிக வரலாறுகளை அறிந்து வாழாத ஓரினம் மெல்ல, மெல்லத் தன் இருப்பை இழந்தே விடும். இந்தத் தேய்வு நிலையில் தான் இன்று இலங்கைத் தமிழினம் உள்ளது. இதனைக் களையும் வல்லமை யும், பொறுப்பும், கடவுளதும், காலத்தின் குரல் களான எழுத்தாளர்களதும் கைகளிலேயே உள்ளன. அந்தவகை உண்மைப் படைப்பாளியாகத் தியா காண்டீபன் உருவாகுவது கண்டு அவரை நெஞ்சார வாழ்த்துகிறேன்.

ச.வே.பஞ்சாட்சரம்

ISBN 978-955-0958-75-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org